பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 29 ஞாயிற்றுக்கிழமை (12-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:91

### தொடர்மாடியில் மறைந்திருந்த

# ஆயுததாரிகள் ஐவரும் சமரின் பின் உயிரிழப்பு!

## குண்டுகளை வெடிக்க வைத்து நால்வர் உயிரை மாய்த்தனர்

கொழும்பு,மார்ச்12

**கொழும்பு நகரை அண்டிய இராஜகிரிய காஸில் வீதியில் நேற்றுமுன்தினம் மாலை தாக்குதல் நடத்தி விட்டுத் தப்பிச் சென்றவர்களில் ஐவர் உயிரிழந்துள்ளனர்.**

பொரளை வீதியில் அமைந்துள்ள 'செப்பென்ரைன்' அரச தொடர்மாடிக் கட்டடத்தினுள் மறைந்திருந்த அவர்களில் ஒருவர் படையினரால் சுடப்பட்டு இறந்துள்ளதாகவும் ஏனைய நால்வரும் தமது உடலில் பொருத்தப்பட்டிருந்த குண்டுகளை வெடிக்க வைத்து உயிரை மாய்த்துக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தாக்குதல் நடத்திவிட்டு இந்த ஐவரும் பொரளை பக்கமாகச் செல்லும் ரயில் தண்டவாளம் வழியே வேட்டுக்களைத் தீர்த்தபடி சென்றனர். பின்னர் அவர்கள் 'செப்பென்ரைன்' தொடர்மாடிக் கட்டடத்தினுள் நுழைந்து அந்தக் கட்டடத்தின் நான்காம் மாடியில் மறைந்திருந்தனர்.

கட்டடத்துக்குள் நுழைவதற்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஆயுததாரிகள் எங்கு தங்கி இருந்தனர்?

கொழும்பு,மார்ச்12

நேற்றுமுன்தினம் படையினர் மீது தாக்குதல் நடத்திய ஆயுததாரிகள் காஸில் வீதியில் ஒதுக்குப்புறமாக உள்ள வீடு ஒன்றில் தங்கி இருந்திருக்கலாம் என்று பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

அந்த வீட்டில் முன்னர் குடியிருந்தவர்கள் அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்டிருந்தனர். அதன் பின்னர் அந்த வீடு பாவனையின்றி இருந்ததாகக் கூறப்படுகின்றது.

ஆயுததாரிகள் குண்டுகள், தற்கொலை அங்கிகள் என்பவற்றை இந்த வீட்டில் மறைத்து வைத்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

அந்த வீட்டில் வெற்றுத் துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (இ-6-5)

### கொல்லப்பட்டோர் குடும்பத்துக்கு ரூ.50 ஆயிரம்

கொழும்பு,மார்ச்12

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினால் தலா 50ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இதேவேளை இறந்தவர்களின் இறுதிக்கிரியைகளை நடத்துவதற்காக அவர்களின் குடும்பங்களுக்கு தலா 10ஆயிரம் ரூபா அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ளது.

(இ-5)

### சிறுவன் பலி!

வலி.கிழக்கு,மார்ச் 12

நிலத்தில் கிடந்த பொருள் ஒன்றை எடுத்த சிறுவன் ஒருவன் அப்பொருள் வெடித்ததினால் உயிரிழந்த பரிதாபச் சம்பவம் ஒன்று நேற்று திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்றது.

திருநெல்வேலி கல்லடி அம்மன் ஆலய வீதியைச் சேர்ந்த எஸ்.நிரேஸ் (வயது 8)என்பவரே இறந்தவர் ஆவார்.

வீட்டுவளவினுள் விளையாடிக் கொண்டிருந்த போது காலில் தட்டுப்பட்ட ஒரு பொருளை இவர் எடுத்தபோதே அப்பொருள் வெடித்ததாகக் கூறப்படுகின்றது.

இவரது கைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் ஆஸ்பத்திரியில் இவரது உடல் வைக்கப்பட்டிருந்தது.

(இ-5-15-180-9)



அப்ப தெற்குக்கு ஒரு நீதி வடக்குக்கு இன்னொரு நீதி போல....!

## பாதுகாப்பு வட்டாரங்கள் அதிர்ச்சி!

கொழும்பு,மார்ச்12

இராஜகிரிய காஸில் வீதியில் - பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்த பகுதியில் - நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சமர் தொடர்பாக பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நவீனரக ஆயுதங்களுடன் ஐந்துக்கும் அதிகமானோரைக் கொண்ட ஆயுதக் குழு ஒன்று அமைச்சர்கள் பயணம் செய்யும் பாதையில் தாக்குதல் இலக்குக்காகக் காத்திருந்தது படை வட்டாரங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த கேள்வியை ஏற்படுத்தி உள்ளது.

பாதுகாப்பு ஏற்பாடுகளை மீறி ஆயுததாரிகள் எவ்வாறு அந்தப் பிரதேசத்துக்குள் ஊடுருவினார்கள்?, நவீனரக ஆயுதங்கள் மற்றும் ஆர்.பி.ஜி. றொக்கட் லோஞ்சர் என்பவற்றை அங்கு எப்படிக் கொண்டு வந்தார்கள்?

ஆயுததாரிகள் தாக்குதல் நடைபெறுவதற்கு முன்னர் அந்தப் பிரதேசத்துக்கு அருகில் நீண்டகாலமாக நிலைகொண்டிருந்தனரா? ஆகிய விடயங்கள் குறித்து தீவிர விசாரணைகளை அதிகாரிகள் நடத்தி வருகின்றனர்.

அதே சமயம் - அரச பகுப்பாய்வாளரும் கொழும்பு நீதிவானும் நேற்று சம்பவ இடத்துக்கு நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

## மொத்தம் 28பேர் உயிரிழப்பு 10பேர் ஆபத்தான நிலையில்

இராஜகிரியவில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் மற்றும் துப்பாக்கிச் சமரின்போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஆயுததாரிகளுடன் சேர்த்து 28ஆக உயர்ந்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 6பேர் விசேட அதிரடிப்படையினர், ஐவர் ஆயுததாரிகள், ஏனைய 14 பேரும் பொதுமக்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது.

அதேசமயம் -

படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களில் 10பேர் மிக ஆபத்தான நிலையில் இருப்பதாக கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார். காயமடைந்தவர்களில் 8பேர் பொலீஸ் மற்றும் பாதுகாப்புப் படைகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## ஆயுததாரிகளைக் கண்டவுடன் இராணுவம் என்றே கருதினோம்

### சம்பவத்தை நேரில் கண்டவர் தகவல்

கொழும்பு,மார்ச்12

திடீரென மாலை 6.15மணியளவில் குண்டுச் சத்தங்களும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டன. அதன்பின்னர் ஒரு குழுவினர் எமது தொடர்மாடிக் குடியிருப்பை நோக்கி ஆயுதங்களுடன் வந்து கொண்டிருந்தனர். அவர்களை இராணுவத்தினர் என்றே நாம் முதலில் கருதினோம்.

இவ்வாறு இராஜகிரியவில் தாக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குண்டுத்தாக்குதல் நடந்தாலும் சமாதான முயற்சிகள் தொடரும்

### டி.எம்.ஜெயரட்ண கூறுகிறார்

கொழும்பு,மார்ச்12

குண்டுத்தாக்குதல்கள் நடைபெற்றாலும் சமாதான முயற்சிகள் தொடர்ந்து இடம்பெறும் என்று பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான டி.எம். ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் அரசு தற்பொழுது எவ்வித பேச்சுக்களையும் நடத்தவில்லை. அதனால் தாக்குதல்களை நிறுத்துமாறு நாம் அவர்களிடம் கேட்கமுடியாது.

அவர்களுடன் பேச்சு நடத்தும் போது இத்தகைய தாக்குதல்களை நிறுத்துமாறு நாம் கோர முடியும்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

இப்பொழுது.....

உதயன்

இணையப் பதிப்பு

அனைத்துலகிலும் வாழும் தமிழ் மக்கள் வாசிக்கலாம்.

இணைய முகவரி :

www.uthayan.com

## சமாதானப் பேச்சுக்களில் புலிகள் பங்குபற்றும் அறிகுறி

### ஜனாதிபதி நம்பிக்கை தெரிவிப்பு

கொழும்பு,மார்ச் 12

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் கலந்து கொள்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினியின் 'ஜனமந்தலி' நிகழ்ச்சிக்கு நேற்று வழங்கியபேட்டி ஒன்றில் ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

விடுதலைப் புலிகள் பேச்சுக்களுக்கு இணங்கி வருவது எனக்கு திருப்தியை அளிக்கின்றது. ஏனெனில் புலிகளுடன் பேச்சு நடத்தி நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலம் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரமுடியும். அதேசமயம் புலிகள் சமாதான முயற்சிகளுக்கு உடன்பாடு இல்லையெனில் அரசயுத்தத்தை தொடர்ந்து

(12ஆம் பக்கம் பார்க்க)

### செம்மணி விவகாரம்

## கைதாகும் ஆறு படையினரும் செவ்வாயன்று யாழ். வருவர்!

### விசேட விமானத்தில் அழைத்துவர ஏற்பாடு

செம்மணி விவகாரம் தொடர்பாக நாளை குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்படவிருக்கும் நான்கு படையினரும் இரு பொலீஸாரும் செவ்வாய்க்கிழமை விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு கொண்டுவரப்படவுள்ளனர்.

இவர்களுடன் கொழும்பிலிருந்து விசேட சிறைச்சாலை அதிகாரிகளும் வரவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பான விசாரணைகள் யாழ். நீதிமன்றத்தில் நடை பெற்றபோது கிருஷாந்தி கொலை வழக்கு குற்றவாளிகளான படைச்சிப்பாய்கள் இந்தப் படையினருடைய பெயர்களை பிரஸ்தாபித்திருந்தனர்.

இந்தப் படையினரைக் கைது செய்து நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் உத்தரவிட்டதைத் தொடர்ந்தே இவர்கள் கைது செய்யப்படவுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (இ-5)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**ENGLISH**

* A/L 2001 & 2002
Mr.Ra.RAJESH
Mr.RAMANATHASAN

**LITERATURE**

*Gr. 9,10&11
Mr.JEYAKUMAR

* Gr. 5 முதல் 11 வரை ஆங்கிலத்தில் சிறப்புத் தேர்ச்சிக்கு

**SHAMROCK**

(C/11375)


## ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்12

யாழ். நகரில் சமாதானத்துக்கான பேரணி ஒன்று நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று ஞாயிறு காலை 10.00 மணிக்கு யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் யாழ்ப்பாணத்திலுள்ள பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறுகின்றது.

அறவழிப் போராட்டக் குழுவினால் இந்தக் கூட்டம் நடத்தப்படவில்லை என்று அதன் செயலாளர் தெரிவித்தார். (இ-5)

## திருட்டு

ஒட்டுமடம் பகுதியில் அண்மைக் காலமாக இரவு வேளைகளில் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான கேடர்கள் மற்றும் கம்பிகள் திருடப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகின்றது.

நேற்றும் இப்படியான முயற்சியில் ஈடுபட்டிருந்த சிலர் பொதுமக்களால் விரட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-4)

## கண்ணீர் அஞ்சலி

### சிவக்கொழுந்து சீனிவாசகம்

எமது அன்புக்கும் மதிப்புக்குமுரிய மாமனாரின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விஸ்வகுல வீதி,
புலோலி வடக்கு,
பருத்தித்துறை.

மருமக்கள் குடும்பத்தினர்.

(74416)

உ

# நன்றி நவிலல்

## அமரர் ஸ்ரீமான் பொன்னையா வேலாயுதம் B.Sc.

### கணிதப் பேராசான் (வெக்டர்), உடுப்பிட்டி.

**எமது குடும்பத் தலைவர் அமரர் பொ.வேலாயுதம் அவர்கள் 29.02.2000 அன்று மின்னல் பொழுதில் விண்ணகம் விரைந்தவேளை:**

* உடன் நின்று ஆவன செய்த உத்தமர்கட்கும்;
* தகவலறிந்து விரைந்தோடி வந்து எமது தீராத் துயரில் மெய்யன்புடன் கலந்தோருக்கும்;
* அமரரின் விண்ணக வழியனுப்பு நாள் வரை உடன் நின்று உதவிய அன்பான இதயங்கட்கும்;
* தந்தி, தபால் மூலம் தம் துயரை அனுப்பி வைத்தோருக்கும்;
* அமரரின் புகழ்பாடும், நெஞ்சுருக்கும் தம் உணர்வுகளை, அஞ்சலிப்பிரசுரங்கள் மூலம் அச்சேற்றி வழங்கிய மாணவச் செல்வங்கள், கல்வி, பொது ஸ்தாபனங்கட்கும்;
* மலர் மாலைகள், மலர்வளையங்கள் சார்த்தித் தம் ஆறாத் துயர் வெளிப்படுத்தியோர்க்கும்;
* இறுதிநாள் பெருந்திரளாகச் சமுகமளித்தும், அஞ்சலி உரைகள் ஆற்றியும் இறுதியாத்திரையில் கலந்துகொண்டும் மற்றும் தோன்றாத் துணையாயிருந்து தொண்டு பல புரிந்த அருமை நெஞ்சங்கட்கும்

**கரம் கூப்பி நன்றி நவில்கின்றோம்.**

"வேலாயுத பவனம்"
உடுப்பிட்டி
12.03.2000

மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

(74407)


# ராஜா

யாழ்ப்பாணம்

**ரசிகர்களே!**

**சூப்பர்ஸ்ரார் ரஜனிகாந்த், சௌந்தர்யா, நடிகர்திலகம் மற்றும் பலர் நடித்த**

## படையப்பா

காட்சிகள்
10.30, 2.00, 5.00

(C/11349)

## நாகம்ஸ்

சுன்னாகம்

**அஜித், சிம்ரன்**

நடித்த

## அவள் வருவாளா?

(ரீல்ஸ்)

காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)

(C/11282)

## லிபேட்டி

அச்சுவேலி

இன்று முதல

சரத்குமார், ரோஜா நடிப்பில்

## சூரியன்

காட்சிகள் – 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
*Fax No:- 0094 - 70212223*

(74393)


உ

## தாயும் நீயே தந்தையும் நீயே

# சைவ வித்தியாவிருத்திச் சங்கம்

### திருநெல்வேலி

## பவள விழா

**காலம்: இன்று (12.03.2000) ஞாயிற்றுக்கிழமை**

*இன்றைய நிகழ்வுகள்: காலை 9.00 – மாலை 5.30*

**காலை 9.00 - 1.00**

9.00 - தேவாரம்: இல்லச்சிறார்

9.10 - தலைமையுரை:
பேராசிரியர் அ.சண்முகதாஸ்
தலைவர், சைவ வித்தியாவிருத்திச் சங்கம்,
பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

9.20 - இந்துபோர்ட் இராசரத்தினம் நினைவுக் கருத்தரங்கு
கருப்பொருள்: *இலங்கையில் கி.பி. 1900 – 1960 வரையிலான கல்வி*
தலைமையுரை: பேராசிரியர் வ.ஆறுமுகம்
பேரவை உறுப்பினர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

9.50 - கருத்துரை: *'வரலாற்றுப் பின்னனி'*
திருமதி சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார்
முதுநிலை விரிவுரையாளர், வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

10.35 - கருத்துரை: *'கல்வி நிறுவனச் செயற்பாடுகள்'*
கலாநிதி நா.தனிகாசலம்பிள்ளை
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாண மாவட்டம்.

11.20 - கருத்துரை: *'யாழ்ப்பாணத்தில் பிறமொழிக் கல்வியின் தாக்கம்'*
பேராயர் அருட்கலாநிதி எஸ்.ஜெபநேசன்
தென்னிந்தியத் திருச்சபை ஆண்டகை.

12.05 - கருத்துரை: *'சைவ வித்தியாவிருத்திச் சங்கமும் எதிர்காலக் கல்வியும்'*
கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ்
வருகை ஆய்வாளர், மொழியாய்வு நிறுவனம்
கக்சுயின் பல்கலைக்கழகம், யப்பான்.

12.50 - நன்றியுரை: திரு. இ.குகதாசன்
பணிப்பாளர், சைவ வித்தியாவிருத்திச் சங்கம்.

1.00 - பெற்றோர் ஒன்றுகூடல்

**மாலை 2.30 - 5.00**

2.30 - தேவாரம்: இல்லச்சிறார்

2.40 - தலைமையுரை: பேராசிரியர் அ.சண்முகதாஸ்
தலைவர், சைவ வித்தியாவிருத்திச் சங்கம்,
பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2.50 - பிரதம விருந்தினர் உரை:

3.00 - இசை நாடகம்:
யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகம்
வழங்கும்
*"வள்ளி திருமணம்"*
தயாரிப்பு, நெறியாள்கை
திரு. கி.விசாகரூபன்
சிரேட்ட விரிவுரையாளர் தரம் II
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

5.00 - நன்றியுரை: திரு. க.நித்தியானந்தன்
பணிப்பாளர், சைவ வித்தியாவிருத்திச் சங்கம்.

**இவ்விழாவில் இணைந்துகொள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

சோ.பத்மநாதன்
(செயலாளர்)
சைவ வித்தியாவிருத்திச் சங்கம்
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ். மாவட்டம்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தலைவர்)
சைவ வித்தியாவிருத்திச் சங்கம்,
பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C/11352)



உ

சாமியே சரணம் ஐயப்பா

## யக்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேச

### சுபமுகூர்த்த அழைப்பு

(பூணூல் சடங்கு)



நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் மாசி மீ 29 ஆம் நாள் 12.03.2000 ஞாயிற்றுக்கிழமையும் ஸப்தமித் திதியும் ரோஹிணி நக்ஷத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 10 மணி 22 நிமிஷம் முதல் 11 மணி 52 நிமிஷம் வரையுள்ள ரிஷப லக்ன சுபமுகூர்த்தத்தில்,

இலங்கை இந்துமத குருபீடாதிபதி சிவாகமஞானி
அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் தம்பதிகள்
பிரம்மஸ்ரீ இ.பாலகிருஷ்ண சர்மா தம்பதிகள் ஆகியோரின் பௌத்திரனும்
எமது ஏக புதல்வனுமாகிய
சபரிமலை சாஸ்தாபீட இளவரசன்
சிரஞ்ஜீவி **சாம்பசிவ ஸ்ரீ மணிகண்ட சர்மா** அவர்களுக்கு

யக்ஞோபவீத தாரண ப்ரம்மோபதேச உபநயன வைபவம் நாயன்மார்கட்டு ஸ்ரீதேவி இராஜராஜேஸ்வரி அம்பாள் திருவருளும், சபரிமலை ஸ்ரீ ஐயப்பசுவாமி பேரருளும் காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளினதும், இலங்கை இந்துமத குருபீடாதிபதி அவர்களினதும் அருளாசி கொண்டு கொழும்பு 15, முகத்துவாரம் 'நாவலர் மணி மண்டப'த்தில் நடைபெறவுள்ளது.

உபநயன தீக்ஷா குரு

"சிவாச்சார்ய பூஷணம் - சர்வசாதக திலகம்"
**சிவஸ்ரீ தே.சு. முத்துக்குமாரஸ்வாமி சிவாச்சார்யார்**

சிவாக திலகம் - சர்வசாதகமணி
**சிவஸ்ரீ முத்துக்குமார ஷண்முக சிவாச்சார்யார்**
(கிழக்கு தாம்பரம், சென்னை - இந்தியா)

அத்தருணம் உற்றார், உறவினர், ஸ்ரீ சாஸ்தாபீட பக்தர்கள் அனைவரும் வருகை தந்து ஸ்ரீ சாஸ்தா பீட இளவரசனை ஆசீர்வதித்து ஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சுபம்

சர்வதேச இந்துமத குருபீடம்
90/22 ஜோசப் டயஸ் லேன்,
புளுமெண்டால் வீதி,
கொழும்பு - 15.
தொ.இல.,தொலை நகல் - 527025

*தங்கள் நல்வரவை நாடும்*
*'சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி'*
*ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சார்யார் ஜே.பி.*
*சரவணபவக் குருக்கள் சுபாஷினி அம்மா தம்பதிகள*

(74410)

# பளையில் 8 லட்சம் ரூபா செலவில் திட்டங்கள் மேற்கொள்ள அங்கீகாரம்

தென்மராட்சி மார்ச் 12

பளைப் பிரதேச செயலகத்தின் இவ்வாண்டுக்குரிய பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை அபிவிருத்தித் திட்ட நிதிஒதுக்கீட்டில் எட்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கான வேலைத் திட்டங்களுக்கு மாகாண ஆளுநரால் அங்கிகாரமளிக்கப்பட்டுள்ளது.

சோரன்பற்று வாய்க்கால் புனரமைப்பு வேலைக்கு ஒரு லட்சத்து 25 ரூபாவும் —

கலுவில்கிருஷ்ணன் கோயில் வீதி நிர்மாண வேலைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் —

பளைப் பொதுச் சந்தையில் கடை அறைத் தொகுதி நிர்மாண வேலைக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்—

பளை வைத்தியசாலைக்கு மருந்துவகை, களஞ்சியம், பொதுக் களஞ்சியம், ஜெனரேற்றர்வைக்கும்அறை ஆகியவை நிர்மாணிக்க ஒரு லட்சம் ரூபாவும் —

பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள 10 குடும்பங்களுக்கு மலகூடம் அமைக்க ஒரு லட்சம் ரூபாவும் —

பளை நகரில் பொது மலகூடம் அமைக்க 75 ஆயிரம் ரூபாவும் —

புலோப்பளை கிழக்கில் பொதுக் கிணறு அமைக்க 50 ஆயிரம் ரூபாவும் —

பிரதேச சபை பொது நூல் நிலையங்களுக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கு 75 ஆயிரம் ரூபாவும் —

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகப் பளைப் பிரதேச சபை செயலாளர் கு. ந. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

பிரதேச செயலகத்தினால் பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை அபிவிருத்தித் திட்டத்திற்கு 10 லட்சம் ரூபாவுக்கான வேலைத் திட்டங்களுக்கு மதிப்பீடு அனுப்பப்பட்ட போதிலும் 8 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கான வேலைத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## பளையில் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

தென்மராட்சி, மார்ச் 12

பளைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் நடைபெறும்.

யாழ்.பிராந்தியத்தில்உள்ள திணைக்களங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

## அடையாள அட்டை விண்ணப்பம் குறித்து அறிவிப்பு

தேசிய அடையாள அட்டை தொலைந்தால் மீண்டும் பிரதி அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பிக்கும் போது தொலைந்த தேசிய அடையாள அட்டையின் இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டுமென ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் சகல பிரதேச செயலகங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

பழைய இலக்கம் குறிப்பிடப்படாத அடையாள அட்டை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ள வேண்டாமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## ஈ. பி. டி. பியில் இருந்து விலகிய இருவர் ஆணைக்குழுவிடம்சரண்!

ஈ. பி. டி. பியில் இருந்து விலகி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் சரண் அடைந்த இரு உறுப்பினர்கள் ஆணைக்குழு அதிகாரியினால் யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

இரத்தினவடிவேல் சுதாகரன் (பூந்தோட்டம், வவுனியா), பதிரத்தினம் கோணேஸ்வரன் (கொடிகாமம், கச்சாய் வடக்கு வயது 28) ஆகிய இருவருமே மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் சரணடைந்தவர்களாவர்.

ஊர்காவற்றுறை ஈ. பி. டி. பி. முகாமில் இருந்த இருவரும் கடந்த 3 ஆம் திகதி விலகித் தலைமறைவாகி இருந்ததாகவும் பின்னர் நேற்று முன்தினம் ஒருவரும் கடந்த வியாழனன்று ஒருவருமாக ஆணைக்குழுவில் சரணடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

சரணடைந்த இரத்தினவடிவேல்சுதாகரன்என்பவர்யாழ். பொலீஸாரால் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

நீதிமன்ற விசாரணையின் போது உயிரைப் பாதுகாக்க உதவிசெய்து வவுனியாவில் உள்ள தனது உறவினர்களிடம் தன்னை அனுப்பி வைக்குமாறு இவர்கோரிக்கை விடுத்தார்.

அதைத் தொடர்ந்து பிரஸ்தாப நபரை எதிர்வரும் 15 ஆம் திகதிவரை யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை—

நேற்று முன்தினம் ஆணைக்குழுவில் சரணடைந்த பதிரத்தினம் கோணேஸ்வரன் தெரிவித்ததாவது:

1992 ஆம் ஆண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பீ. ஏ. பட்டம்பெற்று வேலையற்று இருந்தேன். அதனால் வேலை வாய்ப்புப் பெறும் நோக்கில் ஸ்ரீதர் தியேட்டரில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகத்துக்குச் சென்றபோது நோட்டீஸ் ஒட்டுமாறு என்னைக் கேட்டனர். உதவியாக நானும் நோட்டீஸ் ஒட்டினேன். பின்னர் என்னை ஊர்காவற்றுறைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு எனக்கு ஒருவார பயிற்சி வழங்கப்பட்டது.

என்னை வீடு செல்ல அனுமதிக்குமாறு பல தடவை அவர்களிடம் வேண்டுகோள் விடுத்தேன். எனினும் வீடு செல்ல அனுமதிக்கவில்லை.

அதனால் நாங்கள் இருவர் சேர்ந்து கடந்த 3 ஆம் திகதி ஊர்காவற்றுறை முகாமை விட்டு ஓடினோம். கடந்த 6 நாள்கள் சாப்பாடு எதுவும் இன்றி அங்குள்ள ஓர் இடத்தில் மறைந்திருந்த பின் யாழ். நகர் வந்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைந்தோம் —என்று தெரிவித்தார்.

(ஐ-9-10)

## நாட்டுக்கூத்து கொழும்பில் மேடையேறும்

யாழ்ப்பாணம், மார்ச் 12

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் செயலாளர் செ. மெற்றாஸ்மயிலின் நெறியாள்கையில் உருவான 'வேழம்படுத்த வீராங்கனை' நாட்டுக்கூத்து விரைவில் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் — யாழ். அரசாங்க அதிபரின் வழிகாட்டலில் மேற்படி நாட்டுக்கூத்து முதன்முறையாகத்தென்பகுதியில் மேடையேற்றப்படுவதாகவும்—

அதனைத் தொடர்ந்து கண்டி, மாத்தளை, நுவரேலியா, திருகோணமலை ஆகிய மாவட்டங்களிலும் இந்த நாட்டுக்கூத்து மேடையேற்றப்படும் எனவும் — பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகச் செயலாளர் செ. மெற்றாஸ்மயில் தெரிவித்தார்.

(ஐ-7)

## தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆஸ்பத்திரிகளில்'எக்ஸ்-றே'பிரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். மாவட்ட சுகாதாரச் சேவைகள் பிரிவின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் மேலும் இரு வைத்தியசாலைகளில் 'எக்ஸ்—றே' பிரிவு அமைக்கப்படவுள்ளது.

மந்திகை ஆதார வைத்தியசாலையில் மட்டுமே இது வரை காலமும் 'எக்ஸ்—றே' எடுக்கும் பிரிவு இயங்கி வந்தது. தற்போது சாவகச்சேரி, தெல்லிப்பழை ஆகிய இரண்டு மாவட்ட வைத்தியசாலைகளிலும் 'எக்ஸ்—றே' எடுக்கும் பிரிவு இயங்க உள்ளது.

இதேவேளை—

மந்திகை ஆதார வைத்தியசாலை 'எக்ஸ்—றே' பிரிவுக்குமேலும்ஒரு 'எக்ஸ்—றே' இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சேர்த்து இங்கு இரண்டு இயந்திரங்கள் செயற்படவுள்ளன.

வடக்கு—கிழக்கு மாகாண சபை சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் இதற்கெனக் கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட மூன்று 'எக்ஸ்—றே' இயந்திரங்களில் ஒன்றே மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு இயந்திரங்களும் சாவகச்சேரி, தெல்லிப்பழை ஆகிய இரு வைத்தியசாலைகளிலும் ஆரம்பிக்கப்பட உள்ள 'எக்ஸ்—றே' பிரிவுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(ஐ-15)

## கண்ணிவெடி விழிப்புணர்வுப் பரீட்சை

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டம் நடத்தும் கண்ணிவெடி விழிப்புணர்வு தொடர்பான பரீட்சை நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு, வேலணை மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள் நாளை திங்கட்கிழமை காலை வேலணை, வங்களாவடிச் சந்தியில் உள்ள வலயக் கல்வி அலுவலகத்தில் தத்தமது பாடசாலைகளுக்குரிய வினாத்தாள் பொதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஐ-7)

# செய்திக் கொத்து

## பிரதேச சபை பணிமனைக்கு மின்சார வசதி

தென்மராட்சி, மார்ச் 12

பளைப் பிரதேச சபைத் தலைமை அலுவலகம், பொதுநூல் நிலையம் ஆகியவற்றுக்கு கடந்த திங்கள் முதல் மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. பிரதேச சபைக்கு கடந்த வருடம் வழங்கப்பட்ட விசேட நிதியில் கொள்வனவு செய்யப்பட்டஜெனரேற்றர் மூலமே மின்சாரம் வழங்கப்படுகிறது.

இந் நிதியில் சபைக்கு போட்டோப்பிரதி இயந்திரமும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச சபை செயலாளர் கு.ந. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

(ஐ-117)

## புதிய சப்பறம்

நீர்வேலி, மார்ச் 12

சுன்னாகம் ஐயனார் கோயிலுக்குப்புதியசப்பறம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சுமார் 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட இச் சப்பறத்துக்கான வெள்ளோட்டம் 16 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இப் புதிய சப்பறத்தை சுன்னாகம் ஐயனார் கோயிலடி சிற்பாசாரியார் விஸ்வப்பிரம்ம ஸ்ரீ இ. சிவலோகநாதன் தலைமையிலான குழுவினர் செய்துள்ளார்கள். இச் சப்பறத்துக்கென புதிய மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ-110)

## இராஜ கோபுரம்

நீர்வேலி, மார்ச் 12

நீர்வேலிவடக்கு காளியம்மன் கோயிலுக்கு இராஜ கோபுரம் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

பல லட்சம் ரூபா செலவில் இடம்பெறும் இத் திருப்பணி வேலைகளில் பரிவார மூர்த்திகளுக்கான கோயில்களும் புதிய மணிக் கோபுரம், தரிசன மண்டப அமைப்புஎன்பனவும் அடங்கும்.

இத் திருப்பணி வேலைகளுக்காக ஆலய தர்மகர்த்தாக்களில் ஒருவரான சபாரத்தினம் இராசதுரை தலைமையில் திருப்பணிச் சபை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

(ஐ-110)

## பஸ் நேரம் மாற்றம்

தென்மராட்சி, மார்ச் 12

பளையிலிருந்து தினமும் காலை 7. 30 மணிக்கு யாழ்ப்பாணத்திற்குப் புறப்படும் பஸ் சேவையின் நேரம் மாற்றப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் இந்த பஸ் காலை 7. 15 மணிக்கு பளையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டு வருகிறது.

(ஐ-117)

## அன்பளிப்பு

சுழிபுரம், மார்ச் 12

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தை விஸ்தரிப்பதற்காக ஐந்து பரப்பளவு நிலத்தை அன்பளிப்பாக வழங்க கல்லூரியின் பழைய மாணவர் அ. சதானந்தவேல் முன்வந்துள்ளார். (க-28)

## தீயில் எரிந்த பெண் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

தனக்குத்தானே தீ மூட்டி எரிந்ததாகத் தெரிவித்து யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த 3 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் ஐந்து நாள்களின் பின் அங்கு மரணமானார்.

நெல்லியடிப் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி மாலினி (வயது 34) என்ற இளம் பெண்ணே உயிரிழந்தவராவார். (ஐ-13-159)

## பட்டறை திறப்பு

தென்மராட்சி, மார்ச் 12

கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் பத்து லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட தொழில் நுட்பப் பாடப் பட்டறை மற்றும் விவசாய பாட பயிற்சி மண்டபம் ஆகிய கட்டடங்கள் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளன.

மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட இக் கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. (ஐ-117)

## பேக்கரி சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புதிய ஆண்டின் நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மாவட்டத் தலைவராக பொ. தவராசலிங்கம், மாவட்ட உப தலைவராக சி. சுந்தரலிங்கம், மாவட்டச் செயலாளராக வி. சொலமன், மாவட்ட உப செயலாளராக இ. குமாரசாமி, மாவட்டப் பரிசோதகராக சோ. யோகராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஐ-10)

## திருமறைக் கலாமன்றத்தின் 'விடுதலை வேள்வி'

யாழ்ப்பாணம், மார்ச் 12

திருமறைக் கலாமன்றத்தின் செயற்பாடுகளில் ஒன்றான பாஸ்கா கால திருப்பாடுகளின் காட்சி நிகழ்வின் பிரதி வழங்கும் வைபவம் கடந்த புதன் கிழமை மாலை 5.00 மணிக்கு மன்ற கலைத்தூது மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

மன்றத்தின் முன்னாள் நாடகப் பொறுப்பாளர் ஜி. பி. பேர்மினஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் போது ''விடுதலை வேள்வி'' என்னும் தலைப்பிலான இந்தத் திருப்பாடுகளின் காட்சி நாடகப் பிரதியை மறைக் கல்வி நடுநிலைய இயக்குனர் அருள்திரு. நேசராஜா அடிகளார் வழங்க நாடகத்தை நெறியாள்கை செய்யும் யோ. யோன்சன் ராஜ்குமார் பெற்றுக் கொண்டார்.

வருடா வருடம் நடைபெற்றுவரும் இந்தத் திருப்பாடுகளின் காட்சி இந்த வருடம் எதிர்வரும் ஏப்ரல் 14 ஆம், 15 ஆம், 16 ஆம் திகதிகளில் மன்ற அரங்கில் மேடையேறவுள்ளது.

(இ)

## ஆசிரியர் அல்லாத பட்டதாரிகளுக்கும் பட்டப்பின்கல்விடிப்ளோமா கற்கைநெறிக்கு அனுமதி

### திறந்த பல்கலைக்கழகத்தில்

வலி. தென்மேற்கு, மார்ச் 12 அண்மையில் பட்டம்பெற்று வெளியேறியோரும் ஆசிரியத் தொழிலில் ஈடுபடாதவர்களும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறியைத் தொடர நாவல திறந்த பல்கலைக்கழகத் தலைமை அலுவலகம் 2000 – 2001 கல்வியாண்டில் அனுமதித்துள்ளது.

யாழ். திறந்த பல்கலைக் கழகத்திலும் இதற்கான வசதியேற்படுத்தப்பட்டுள்ளது. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விண்ணப்பப்படிவங்கள் இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பிராந்திய இயக்குநர் ச.ஆ. ஞானேந்திரன் தெரிவித்தார்.

புதிய கல்வியாண்டில் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை தொடரவுள்ளோர் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்பாக விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

இதேவேளை —

2000 — 2001 கல்வியாண்டில் சிறுவாணிக முகாமைத்துவமும் தொழிலுரிமைத்துவமும் (ESBM) கற்கைநெறிக்கு விண்ணப்பித்தவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பதிவுகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் பிராந்திய இயக்குநர் கேட்டுள்ளார்.

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தில் தொழில்நுட்பவியல் டிப்ளோமாக் கற்கை நெறிக்கு விண்ணப்பித்தவர்கள் பதிவு செய்ய நாவல தலைமை அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளதாகவும் –

யாழ். திறந்த பல்கலைக் கழகத்தில் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பித்த 109 விண்ணப்பதாரிகளும் தமக்குரிய பதிவுகளை யாழ்ப்பாணத்தில் நடத்த வழியேற்படுத்தித்தருமாறு பிராந்திய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் ஊடாக யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையிடம் கேட்டுள்ளனர்

(ஐ–185)

### சிரமதானம்

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 12

புன்னாலைக்கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை விளையாட்டு மைதானம் பாடசாலை மாணவர்களினால் சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. (ஐ–133)

---


## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 06 — 03 — 1938

மறைவு 28 — 01 — 2000

அமரர்

**காசிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை**

திதி: 12–03–2000

அன்பின் திருவுருவே, பாசத்தின் ஒளிவிளக்கே!
எம்மையெல்லாம் பூமியிலே பேரோடும் புகழோடும்
வாழவைக்க வேண்டும் என்று அரும்பாடுபட்டீர்கள்.

உங்கள் அன்பு மனையாளை பாசத்தின் நல்லாளை நற்புத்திர செல்வங்களைக் கண்ணீரில் வாழவிட்டுக் கணப்பொழுதில் நீங்கள் மறைந்துவிட்ட மாயம்தான் நாமறியோம்! கண்களை கண்ணீர்த்திரை மறைக்கின்றதே காலம் தோறும் கையெடுப்போம் வல்ல இறைவனிடம். நல்ல முறையில் ஆறுதலடைய வேண்டி நிற்கின்றோம்.

மனைவி, மக்கள்.

பிரதான வீதி,
நீர்வேலி வடக்கு. (74350)

## முதலாம்ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் சண்முகம் சோமசுந்தரம்**
(முன்னாள் உதயன் முகவர், குஞ்சர் கடை)

மலர்வு 03-07-1934

உதிர்வு 22-02-1999

திதி: 2000–03–12 ஞாயிற்றுக்கிழமை

நீங்கள் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
தங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு நீங்காது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
பெறாமக்கள், மருமக்கள், சகோதரர்,
பேரப்பிள்ளைகள்.

நீலன் குளத்தாழ்வு,
கரணவாய் மத்தி, கரவெட்டி. (74315)

## அருள்நெறிவிழா-2000

### 1999 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சிறந்த இந்துசமய நூல்களுக்குப் பரிசளித்தல்

1999 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 1999 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையுள்ள (இரண்டு தினங்களும் உட்பட) வெளியிடப்பட்டனவும், இந்துசமயம் பற்றியனவுமான நூல்கள் மதிப்பீடு செய்யப்பட்டுத் தகுதி வாய்ந்த நூல்களின் ஆசிரியர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

பரிசுத் தேர்வில் பங்குகொள்ள விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் நூலின் ஐந்து பிரதிகளையும் அஞ்சல் மூலம் இந்துசமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். விண்ணப்பத்தையும் நூல்களையும் நேரடியாகவும் ஒப்படைக்கலாம்.

விண்ணப்பங்களுடன் நூல்களும் ஏற்றுக் கொள்ளப்படும். இறுதித்தினம் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 23 ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) ஆகும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும்.

சாந்தி நாவுக்கரசன்
பதில் பணிப்பாளர்
இந்துசமய, பண்பாட்டு
அலுவல்கள் திணைக்களம்.

98, வோட் பிளேஸ்,
கொழும்பு - 7.
12-03-2000

## அருள்நெறி விழா - 2000

### இந்துசமய, பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்

இந்துசமய நூற் பரிசுத் தேர்வு - 1999

மாதிரி விண்ணப்பப் படிவம்

1. நூலின் பெயர்:-
2. நூலாசிரியரின் பெயர்:-
3. தற்போதைய முகவரி:-
4. நிரந்தர முகவரி:-
5. தொலைபேசி இருப்பின் இலக்கம்:-
6. நூல் பதிப்பிக்கப்பட்ட நாடும் அச்சக முகவரியும்:-
7 நூல் வெளியிட்ட வருடம்:-... மாதம்:-... திகதி:-...
8. நூலின் விலை:-

இந்நூல் முதற்பதிப்பு என்பதனையும் இந்நூலின் பகுதிகள் ஏற்கனவே வேறு நூல்களில் இடம்பெறவில்லை என்பதனையும் தெரிவிப்பதுடன்,

மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை எனவும் போட்டி விதிகளுக்கு உடன்படுகின்றேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

............................
விண்ணப்பதாரர் கையொப்பம்

திகதி:- ..............

(சி/11266)

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்





அமரர்
**சிவசம்பு ஆனந்தநடராசா**

தோற்றம்: 23-06-1930 மறைவு: 08-01-2000

திருமதி
**றஞ்சினிதேவி வசந்தரூபன்**
(நந்தினி)

தோற்றம்: 17-12-1964 மறைவு: 17-12-1999

எம் அன்புத் தெய்வங்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலமும் நேரடியாகவும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி ஆனந்தநடராசாவும்
குடும்பத்தினரும்.

23, நக்கா வீதி,
யாழ்ப்பாணம். (74326)

## உதயன்

### ஆதரவற்றோருக்கு அள்ளிவழங்குங்கள்

ஊரில் ஓர் ஆலயத்தைக் கட்டுவதைவிட ஒரு பாடசாலையை—கல்விச்சாலையை—அமைப்பது ஆயிரம் மடங்கு கஷ்டமான பணி.

பாடசாலையை ஒருவாறு கட்டிவிட்டாலும் கூட, அதனை நிர்வகித்து ஏழைப் பிள்ளைகளுக்கு இலவசக் கல்வி அளிப்பது என்பது இமாலயச் சேவையாகும். இத்தகைய சேவையை மனந்தளராது நிறைவேற்றியவர் ''இந்துபோர்ட்'' (சைவ வித்தியா விருத்திச் சங்கம்) இராசரத்தினம் அவர்கள்.

குடாநாட்டுப் பிள்ளைகள் தமிழ், சைவப் பாரம்பரியங்களைப் பயின்று அந்தச் சூழலில்கல்வி அறிவுபெறவேண்டும் என்ற பெருநோக்கோடு, சைவப் பள்ளிக்கூடங்கள் என்று சொல்லப்படும் கல்விச் சாலைகளை ஊருக்கு ஊர் நிறுவிப் பராமரித்தவர் அவர். அந்தந்த ஊர்களைச் சேர்ந்த வள்ளல்கள், கல்விமான்களின் பெருந்துணையோடு, பெருங் கல்விச் சேவை புரிந்தார். கல்வியில் மறுமலர்ச்சி செய்தார்.

குடாநாட்டில் ஊர் தோறும் அவர் அமைத்த கல்விச்சாலைகளிலேயே அன்றைய கிராமத்துச் சிறுவர்கள் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து தமது கல்விக்கு அத்திவாரம் இட முடிந்தது. அவர்கள் கல்வி அறிவு பெற இயன்றதனாலேயே அவர்தம் சந்ததியினரும் கல்விபெற்று முன்னேற முடிந்தது.

அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்ற பின்னர் கல்வி முறையில் பலப்பல மாற்றங்கள் வந்துவிட்டன. ஆகப்பிந்திய புதிய கல்விக் கொள்கையின் விதிமுறை ஒன்றின் பிரகாரம், பல சிறிய பாடசாலைகளை மூடுவதற்கு எற்பாடாகிறது. இதன்போது ''இந்துபோர்ட்'' நிறுவிய பல பாடசாலைகள் அடையாளம் இல்லாமற் போகும் ஆபத்து உண்டு.

குடாநாட்டின் உயர்கல்வி அதிகாரிகள் சைவப்பள்ளிக் கூடங்களின் மகிமையை மேலிடத்துக்கு எடுத்துச் சொல்லி அவற்றை மறைந்து விடும் ஆபத்து வராமல் தடுக்க வேண்டும். இது அவர்கள் ஆற்ற வேண்டிய ஒரு வரலாற்றுப் பணியாகும்.

பாடசாலைகளை நிறுவிப் பராமரிப்பது போலவே அநாதைச் சிறுவர் இல்லங்களை உண்டாக்கிச் சேவை செய்வதும் கஷ்டம் நிறைந்த பணியாகும். ''இந்துபோர்ட்'' அந்தக் காலத்திலேயே அநாதைச் சிறுவர் இல்லம் ஒன்றை நிறுவி நிர்க்கதியான சிறுவர் சிறுமியர்களுக்கு, அடைக்கலம் தந்து வாழ வழி செய்தது. இப்போதும் அப்பணி தொடர்கிறது.

சாதாரண காலங்களை விட இப்போது போரின் விளைவாக ஆதரவற்றோரின் எண்ணிக்கை இங்கு பெருகிவிட்டது. அதனால் அநாதை இல்லங்களின் தேவையும் அதிகரித்து விட்டது. இவற்றை அமைக்கவும் பராமரிக்கவும் உள்நாட்டு, வெளிநாட்டுப் பரோபகாரிகளின் பங்களிப்பு முழுக்க முழுக்கத் தங்கி இருக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக வெளிநாடுகளில் வதியும் எம்மவர்கள் இப்பணிக்கு நிறைய உதவ வேண்டும். சேவையும் அர்ப்பணிப்பும் உள்ள தலைமைத்துவங்களின் கண்காணிப்பில் இயங்கும் ஆதரவற்றோர் இல்லங்களுக்குத் தாராளமாக உதவ வேண்டும்.

அந்தத் தானம் ஆலயத்தில் செய்யும் பூசைகளை விடவும் புண்ணியம் தரும்.

ஆலயங்களில் கோடிக்கு ஆடம்பரச் செலவு செய்யாமல் ஆதரவற்றோருக்கு உதவுவது ஆண்டவன் தரிசனத்துக்குச் சமம். இதனை இங்குள்ளோரும் வெளிநாடுகளில் வாழ்வோரும் உணர்வாராக.

# கர்ம வீரர் 'இந்துபோட்' இராசரத்தினம் கட்டிவளர்த்த இன்றைய சைவச்சிறுவர் இல்லம்

சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் பவளவிழா நேற்று நடைபெற்றது; இன்றும் நடைபெறுகிறது. சைவ அநாதைச் சாலையாக அன்று ஆரம்பிக்கப்பட்ட இன்றைய திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தின் கதை சொல்லும் இக்கட்டுரை 1956 ஆம் ஆண்டு வெளிவந்த ''ஈழகேசரி'' வெள்ளிவிழா மலரில் இருந்து பெறப்பட்டது.

எழுதியவர்: **பண்டித வ. நடராஜன்**

ஆரணியத்திலே, இராமனுஞ் சிதையுந் தங்குவதற்காக, இலக்குவனாலாக்கப் இட்ட பன்னசாலையை ஸ்ரீ குமாமன் பார்த்தான். அரச பரம்பரனொருவன் அத்தகைய சிறந்த பன்னசாலை ஒன்றை அமைத்ததைக் கண்டு, அவன் மனம் வியப்படைந்தது. பூவிலும் மெல்லியனவாய சிதையின் பாதங்கள் பரற்கற்களுள்ள கானில் நடந்துவந்தமை அரிய காரியந்தான்! ஆனால், தன் தம்பியின் கை இப் பன்னசாலையைச் சமைத்தது அதைவிட அரிய காரியம்!' 'உலகில் எதுவுமற்றவர்க்கு எவ்வித துணையுமில்லாதவர்க்கு அரியதான ஒரு காரியமுமில்லைப்போலும்!' என்னும் பொருளில் இராமன் கூற்றாக ''யாவையாதுமிலார்க்கரிதாயவே;' எனக் கம்பர் கூறியுள்ளார்.

ஆம்; உலகிற் பெரிய காரியங்கள் பல, அநாதைகளாலேயே சாதிக்கப்பட்டிருக்கின்றன. உலகப் பிரசித்திபெற்று விளங்கும் ஐக்கிய இயக்கம் ஏழைகளின் இயக்கமே. ஆயினும் அதற்குக்கருணையுள்ளம் படைத்த பெருமக்களின் தொண்டும் இன்றியமையாதிருந்தது. இத்தகைய கருணை வள்ளல்களால் எத்தனையோ புண்ணிய கைங் கரியங்கள் நடைபெற்றிருக்கின்றன!

### இரு பேருள்ளங்கள்

யாழ்ப்பாணச் சைவ அநாதை சாலையை அறிந்தோர் திருநெல்வேலி. டாக்டர் எஸ். சபாபதிப்பிள்ளை அவர்களை நினையாதிருக்க முடியாது இந்த டாக்டர்களின் மனந்தான் எவ்வளவு மென்மையானது! எவ்வளவு இரக்கமுடையது! இத்தகைய இரண்டு அன்புள்ளங்கள் இல்லையெனில் இன்று சைவ அநாதசாலையை நாம் காணமுடியுமோ என்பது சந்தேகமே. துர்ப்பாக்கியசாலிகளான ஏழை அநாதைச் சிறுவர்களதுவாழ்வின் கொடுமை, பரிதாப நிலைமை டாக்டர் சபாபதிப்பிள்ளை அவர்களது மனத்தை புனிதமான இளகிய உள்ளத்தை — வாட்டியிருக்க வேண்டும்! இம் மனவியல்பு வறுமை காரணமாக — அநாதரவு காரணமாக — மதம் மாறும் சிறுமையை நீக்க வேண்டுமென்னும் நோக்கங்கொண்ட திருவாளர் சு. இராசரத்தினம் (இந்துபோட்) அவர்களுக்குத் தெரிந்தால் அவர் சும்மாவிடுவாரா? ஆகவே, 1928 ஆம் ஆண்டு விஜயதசமித் தினத்தன்று சைவ அநாதைசாலை ஆரம்ப[illegible] இதன் வளர்ச்சிக்குப் பெருநவி புரிய வரும் ஒரு டாக்டரே. இக்காலத்துப் பேருபகாரியாய் விளங்கும் டாக்டர் சுப்பிரமணியம் அவர்கள் சைவ அநாதைசாலையிலுள்ள நூற்றுக்கணக்கான சிறுவர்களின் வாழ்வுக்கு, பொருளுதவியும் இலவச வைத்திய உதவியும் புரிந்து வருகிறார். சைவ அநாதைச் சிறுவர்கள் அதிர்ஷ்டசாலிகள் போலும்! வாழ்க டாக்டர்கள்! வாழ்க அவர்களது இரக்கம் வாய்ந்த பேருள்ளங்கள்!

### ஒரு கடிதம்

சில ஆண்டுகளின் முன்னர், ஒரு நாள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலையில் எட்டாம் வகுப்பிலே தமிழ் வியாச பாடம் நடந்து கொண்டிருந்தது. விடுதியில் வதியும் மாணவர்கள் வருட ஆரம்பத்தில் வகுப்புப் பாடநூல்கள் வாங்குவதற்காக பணம்பெறும் பொருட்டு அவ்வவர்களின் பெற்றோர்களுக்குக் கடிதமெழுதுமாறு அவ்வகுப்பு மாணவருக்குக் கூறப்பட்டது. எழுதப்பட்ட அப்பியாசப் புத்தகங்களை ஆசிரியர் திருத்திக்கொண்டிருந்தார். அவற்றில் ஒரு புத்தகத்தில் விலாசதாரரின் விலாசம் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

திரு. ...................... அவர்கள்
111. அருணகிரிநோட்கயிலாயம்
போஸ்ற் பெருஞ்சுடலை வழி.

இதனை வாசித்த ஆசிரியர் ஆச்சரியத்துடன் கடிதத்தை வாசித்தார் அதில் —

''அன்புள்ள தந்தையார் அவர்களுக்கு. ஐயா, உம்மைப் படத்திலன்றி நேரே பார்த்தறியேன். என்னையும் என் சகோதரங்களையும் பாதுகாக்கும் பொறுப்பேற்ற நீர், அதற்குப் பயந்து எங்களைப் பிரிந்துவிட்டீர். தயவு செய்து இந்த அநாதைசாலைக்கு ஒரு முறை வாருங்கள். என்னைப்போல நூற்றுக்கணக்கான அநாதைகளுக்கும் வாழ்வு உண்டு என்பதைச் செய்கை முறையிற் காட்டும். எங்கள் 'அப்பு'வை ஒருமுறை பாருங்கள். அவர் தான் திருவாளர் சு. இராசரத்தினம் அவர்கள்; சைவ வித்தியாவிருத்திச் சங்கக் காரியதரிசி'' ...—

எனக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

### வாழ்க்கைக்கு வேண்டிய உதவிகள்

ஆசிரியர் அப்பியாசமெழுதிய மாணவியை அழைத்து விசாரித்தார் துன்பக்கதையொன்று வெளிவந்தது. துர்ப்பாக்கியக் குழந்தை ஒன்று இம் மாய உலகில் முதற் குரலிட இரண்டு மாதங்களுக்கு முன்னரே தன் தந்தையை இழந்துவிட்டது. ஐந்து ஆண்டுகளுக்குள் தாயையும் இழந்தது. யாரோ புண்ணியசீலர்களின் உதவியால் அக்குழந்தை சைவ அநாதைசாலையை அடைந்தது. அங்கே அது உணவு, உடை, புத்தகம் என்பவற்றை இலவசமாகப் பெற்றுக் கல்வி கற்றுவருகிறது. அக்குழந்தை வேறு யாருமன்று. கட்சாத் அம் மாணவியே தான்!

இங்ஙனமாக அங்கே நூற்றுக்கணக்கான அநாதையான ஆண்களும் பெண்களும் வாழ்கிறார்கள். ஆம்; வாழ்கிறார்கள். ஏனெனில் அநாதைப்பிள்ளைகளுக்குக் கல்விபெற வசதி செய்து வரும் திருவாளர் இராசரத்தினம் அவர்கள் அநாதைகளை ஒழுக்கமுள்ளவர்களாக்கி — ஆசிரியர்களாக்கி — பட்டதாரிகளாக்கி — சங்கீதபூஷணங்களாக்கி — அரசாங்க உத்தியோகத்தர்களாக்கி வருவாய் பெற்று வாழச் செய்வதோடமையாது அவர்களுக்குத் திருமணமும் செய்வித்து வாழ வைக்கிறார்! வாழ்வுக்கு வேறென்ன வேண்டும்!

### வாடகை வீட்டில்

1928 ஆம் ஆண்டு வாடகை வீட்டில் ஏழு மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட அநாதைசாலை அடுத்த ஆண்டு 63 மாணவர்களுடைய சாலையாய் வளர்ந்துவிட அவர்களைப் பராமரிக்கும் பொறுப்பைத் திருவாளர் சி. முருகேசு ஆசிரியர் அவர்கள் ஏற்றுக் கொண்டாராம்! உண்மையில் அவர் அவ்வநாதைகளின் தந்தை போலவே தொண்டுகள் செய்ததாக அக்காலத்தில் அநாதை மாணவர்களாயிருந்து இப்போது பல்வேறு தொழில் புரியும் பலர் வாழ்த்துகிறார்கள்!

ஒரேயொரு கிணறு; பாதாளக் கிணறு நாற்பதடி ஆழம்; அதுவும் வல்லூற்று வரி. 'கயிறுகுறுமுகவை' எனப் பதிற்றுப்பத்தில் வருணிக்கப்



'இந்துபோட்'
இராசரத்தினம்

படும் 'வாளி' போன்ற வாளியால் பாதாளத்திலிருந்து நீர் பெறவேண்டும்! 63 மாணவர் — அதுவும் தண்ணீர் அள்ள முடியாத சிறுவர் — அக்கிணற்றினுதவியாற் குளிக்கவும் வேண்டும்; சீலை துவைக்கவும் வேண்டும்! ஒருமுறை கற்பனை செய்து பாருங்கள் ஆயினும் சிறுவர் — கைநிறைய முத்தும் பவளமும் போன்ற சிரங்குள்ள பாலர் — முறை தவறாது குளித்தனர்! சீலை துவைத்தனர்! 'எப்படிப் பாடினரோ' என்றொரு பாடல் ஞாபகமுள்ளவர்கள் 'எப்படி நடத்தினரோ' அந்தக் காலத்தில் என ஒரு பாடல் பாடிவிடலாம்; ஏன்? ஒரு புராணமும் பாடிவிடலாம் போலத் தோன்றுகிறது!

### பத்தாண்டுகளுக்குப் பின்

1938 ஆம் ஆண்டில், அதாவது அநாதைசாலைஆரம்பித்துப் பத்து வருடங்களின் பின், திருவாளர் ஏ. செல்லப்பா அவர்களின் முயற்சியால் (அக்காலத்து சைவ வி.வி. சங்க முகாமைக்காரராயிருந்தவர்) அநாதைகளான பெண்களும் சேர்க்கப்பட்டனர். பெண் குழந்தைகளின் மேற்பார்வையாளராக முதன் முதல், 'ஈழகேசரி' ஆசிரியர் திரு. இராஜ அரியரத்தினம் அவர்களின் தாயாராகிய இராசம்மையார் அவர்கள் கடமையாற்றினார்கள். (திருமதி இ. இராசம்மா அவர்கள் நுணாவில் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தமிழ் வித்தியாசாலைகளில் ஆசிரியையாகக் கடமையாற்றி இளைப்பாறியவர்கள்.) இவ்வாறு பலரின் உதவியால் சைவ அநாதைசாலை வளர்ந்தது. இன்றுசை.வி.வி.ச. முகாமைக்காரராகிய திரு. எஸ் அட்சலிங்கம் அவர்களது முகாமையின் கீழ் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு.பொ.செல்லத்துரை அவர்களதும், உதவியாசிரியைகளதும்மேற்பார்வையில்அநாதைசாலை வளர்கிறது. இன்று சைவ அநாதை சாலையிற் பெண்களின் தொகையே அதிகம். அகில இலங்கையிலும் முதன்மையான அநாதைசாலையாக விளங்குவது சைவ அநாதைசாலையே!

### அதிசயமான காரியம்

ஒரு ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்துவதென்பது சாதாரண காரியமன்று. அதுவும் அநாதை ஸ்தாபனமொன்றை ஆரம்பித்து நடத்துவது எத்துணைக் கஷ்டமான வேலை! அதுவும் பொருளாதாரத்தில் கீழ் நிலையிலுள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கம் இம் முயற்சியிலிறங்கி இதனை நடத்துவது எவ்வளவு அதிசயம்! ஆனால் இந்த அதிசயங்கள் எல்லாம் திரு. இராசரத்தினம் போன்ற கருமவீரர்களின் முன் எம்மாத்திரம்! அரிசியும் விறகும் தேடிக்கொண்டு சமையல் வேலையை ஆரம்பிப்பவரல்லர் ஸ்ரீமான் இராசரத்தினம் அவர்கள். அவர், உலைவைத்து அது கொதிக்கும் போது அரிசியை எப்படியாவது இரவல் வாங்கி உணவாக்கும் கருமவீரர் கோஷ்டியைச் சேர்ந்தவர்! இதனாலேயே அவர் பலவெற்றிகளை அடைந்தார். அவ் வெற்றியின் ஒரு சின்னமே சைவ அநாதசாலையின் வளர்ச்சி. இவ் வநாதசாலையின் வளர்ச்சி இன்று அகில இலங்கையினதும் மதிப்பைப்பெற்று விளங்குகிறது என்று நான் கூறினால் நீங்கள் ஆச்சரியமடைவீர்களா?

தயவுசெய்து கீழேவரும் சம்பாசணையைப் படியுங்கள் இதிலுள்ள வினாக்கள் திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாசாலைத், தலைமையாசிரியரால் வினாவப்பட்டவை; விடைகள் ஓர் அநாதைச் சிறுவனுடையன:

(8 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

மாசி 30
திங்கட்கிழமை
திதி: அட்டமி
முன்இரவு 11.28 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
பின்இரவு, 1.19 வரை.
கடரிநேரம்: 12.22—1.52
ராகுகாலம்: 7.52—9.22
(பகலுக்கும் இரவுக்கும் பஞ்சாங்க நேரப்படி)

### உதயவாக்கு

மனிதனுடைய உள்ளத்தில் ஏழு நிறங்களல்ல; எழுநூறு நிறங்கள் உள்ளன.

- காண்டேகர்

### யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

வண்ணை வைத்தீஸ்வரரே வாலாம்பிகை நாயகரே
வரமருள வேண்டுமையா வந்தெமக்கு
கண்ணை இமை காப்பதுபோல் காத்திடும் ஈசனே
கால்பிடித்தோம் சரணம் சரணம் என்றே
பெண்ணை யிடப்பாகம்வைத்த பெருமானே பரமேசா
பேரருள் புரிந்தெமைக் காத்திடையா
மண்ணைச் சதமென்று நம்பிடும் மாந்தர்க்கென்றும்
மரண பயமொழிக்க மாண்புடனே வாரீரோ!

— இராசையா ஸ்ரீதரன்

# நான்காவது முறையாக சிங்களவரை பொறியில் வீழ்த்துவதற்கு முயற்சி!

## குமுறுகிறார் பௌத்த தேரர்

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்காக நோர்வே அரசாங்கம் ஆரம்பித்துள்ள முன் முயற்சிகள் தொடர்பாக இலங்கையின் சக்தி மிக்க பௌத்த துறவிகளில் ஒருவரான மாதுளவாவே சோபித தேரர் தனது கருத்துக்களை 'திவயின' சிங்களவார இதழுக்கு அளித்த பேட்டியில் வெளியிட்டுள்ளார்.

அதன் தொகுப்பை இங்கு தருகின்றோம்.

இந் நாட்டில் ஆட்சியில் இருப்பவர்கள் எப்போதும் என்னைத் தனது அரசியல் எதிரியாகவே கருதுகின்றனர். ஐ. தே. கட்சி ஆட்சியின் போது என்னை சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவாளர் எனக் கருதினர். தற்போது சிறி. ல. சு. கட்சி ஆட்சியில் இருக்கிறது. என்னை இப்போது ஐ. தே. கட்சி ஆதரவாளர் எனக் கூறுகின்றனர். சமீபத்தில் ஒரு பத்திரிகையில் 'அரசின் புதிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராகச் செயற்படுவதால் ஐ தே. கட்சி பெருந்தொகை நிதியையும் சொகுசு வாகனம் ஒன்றையும் எனக்கு வழங்கியுள்ளதாக' செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டை ஆளும் அரசுகள் (கட்சிகள்) ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் ஆகும். புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் வடபகுதிப் பிரச்சினைக்குத் தீர்வினைக் காண முடியாது என இன்றும் கூறுகிறேன். வடக்கில் முற்று முழுதாக பயங்கரவாதமே இடம்பெற்றுள்ளது. இதில் எதுவித சந்தேகமுமில்லை. இந்தப் பயங்கரவாத அமைப்பு தமிழ் மக்களுக்கு எதிரான அமைப்பாகும். தாங்கள் தான் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்பு என விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர். அந்த அளவுக்கு அது ஒரு பயங்கரவாத அமைப்பாகும்.

அரசு, எதிர்க்கட்சி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியன வடக்கு—கிழக்குப் பிரச்சினையை இனப் பிரச்சினை எனக் கூறுகின்றன. பிரச்சினையின் தன்மையை இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதையே இது காட்டுகிறது. இந்தப் பிரச்சினையைப் பகுப்பாய்வுக் கண்ணோடு அணுகுமாறு நாம் எப்போதும் கூறிவருகிறோம். இந்த நாட்டில் இனப்பிரச்சினை என ஒன்று இருக்குமேயானால் எவ்வாறு பெரும் எண்ணிக்கையிலான தமிழ் மக்கள் கொழும்பு வந்து சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்கின்றனர்? வடக்கு—கிழக்கிலிருந்து 4 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் சிங்களப் பிரதேசங்களுக்கு வந்து வாழ்கிறார்கள். எனவே இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்தும் இனப் பிரச்சினை என எவ்வாறு கருத முடியும்? இங்கிதமாகப் பிரச்சினையின் மூலகாரணங்களைக் கண்டறியாது காணப்படும் தீர்வுகளினால் இப் பிரச்சினையைத் தீர்க்கலாம் எனச் சிந்திக்கவே முடியாது.

தற்போது நோர்வே நாட்டின் ஏற்பாட்டில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான உடன்பாட்டை ஏற்படுத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன எனக் கூறப்படுகிறது. இதன் உண்மை விவரங்களை நாங்கள் அறியோம்.

எமது மக்களிடையேயுள்ள பிரச்சினைகளிலும் பார்க்கப் பாரிய பிரச்சினைகள் தமிழ் மக்களிடையேஉள்ளன. கரையார் குல மக்களுக்கும் வேளாள குல மக்களுக்கும் பெரிய அளவில் குலபேதம் நிலவுகிறது. கரையார் குல மக்களைக் கோயிலுக்குள் அனுமதிப்பதில்லை; கல்வி கற்க அனுமதிப்பதில்லை. பதவிகள் எவற்றையும் வழங்குவதில்லை; அவர்கள் அடிமைகள் போல் நடத்தப்படுகிறார்கள். இந்நிலை காரணமாக அம்மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதனாலேயே அவர்களிற் பலர் சிறிலங்காவிலிருந்து சென்று வெளிநாடுகளில் தங்கியுள்ளனர். இவ்வாறு வெளிநாடு சென்றவர்களில் பெரும் எண்ணிக்கையானோர் நோர்வே சென்றுள்ளனர். இந்தக் கரையார் குல மக்கள் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். மீன் பிடிப்பது அவர்களது பரம்பரைத் தொழிலாக இருந்தது. நோர்வே நாடு மீன்பிடித் தொழிலை முக்கிய வருமா

(8 ஆம் பக்கம் பார்க்க)

தமிழில்: கஜனி

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# ஆடல் பாடல் பரவிய கூத்து நாடகவகைக்கு எதிர்காலம் உண்டு

## 'அடங்காப்பற்று' சான்று பகர்கிறது

கலைச்சுடர்

நாடகத்துறையில் யாழ். பல்கலைக்கழகம் பிரமிக்கத் தகும் வளர்ச்சியைக் கண்டுள்ளது என்பதை, மாதாந்தம் கைலாசபதி அரங்கில் மேடையேறும் பலவித ஆக்கங்கள் நிரூபித்து நிற்கின்றன. புதுப்புனல் பாய்ச்சப்பட்ட பல்வேறு தயாரிப்புக்களைப் பார்க்கும் வேளை, நிகழ்த்திக்காட்டலில் அனுபவமுள்ளவர்கள் கூட கற்க ஏராளம் உண்டென உணர முடிகிறது. பல நவீன நாடகங்களைச் சுவைத்த நமக்கு கூத்து வடிவில் அண்மையில் மேடையேறிய 'அடங்காப்பற்று' தமிழரின் ஆரம்ப நாடக வடிவுபற்றி விளக்கம் தரும் அரங்காகவும் அமைந்தது.

முச்சந்திகளிலும் வீதிகளிலும் ஆடப்பட்ட தெருக்கூத்தே ஆதித் தமிழனின் நாடக வடிவமென தென்னக அறிஞர்கள் பலர் வலியுறுத்துகிறார்கள். அதன் பரிணாம வளர்ச்சியாக நாட்டுக் கூத்துக்கள் அடுத்த நிலையை எய்தியிருக்க வேண்டும்.

சமதரை ஆட்டம் மேடை ஆட்டமாக மாறியது. இருப்பினும் தெருக்கூத்தின் முக்கிய கூறுகள் மொத்தமாகக் கைவிடப்படவில்லை.

கட்டியக்காரன் ஆட்டம், பல அடவுகளை அடக்கிய தாளக்கட்டுக்களை உடைய குழு நிலை ஆட்டங்கள் நுட்பதிட்பத்துடன் தொங்கி ஆடி, திடீரென மண்டியிடும் வகையில் நிலத்தோடு நிலமாகப் படிந்து ஆடுதல், வேகத்துடிப்புடன் கால்களை வீசி வீசி ஆடுதல், தீர்மானங்களைத் தனிமுத்திரையுடன் ஆடுதல் போன்ற தெருக்கூத்து ஆட்ட முறைகள் பார்வையாளர்களைப் பரவசப்படுத்தின.

றுஷாங்கன் என்ற இறுதி ஆண்டு மாணவனின் நெறியாள்கையில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட பட்டதாரி மாணவர்கள் ''அடங்காப்பற்று'' நாடகத்தில் பங்கு கொண்டமை வருங்காலத்தில் ஆடல்பாடல் விரவிய நாடக வகை (கூத்து வடிவம்) பெரு வரவேற்பைப் பெறும் என்ற போக்கைச் சுட்டுகிறது.

அந்நியர் ஆட்சி இலங்கையில் காலூன்றிய வரலாற்று ஓட்டத்தின் ஒரு பகுதியை அடியொற்றி, பண்டார வன்னியனை மையமாக வைத்து பின்னப்பட்ட ''அடங்காப்பற்று'' கூத்தில், சுயநலத்துடன் வந்த பிரித்தானியர் கையாண்ட பிரித்தாளும் தந்திரங்கள், புல்லுருவியின் உதவியுடன் சில பிரதேசங்களைக் கைப்பற்றிய அம்சங்கள், வன்னியர் எதிர்ப்பு, போர் எனத்தொடரும் காட்சிகளில் சமகால அரசியற் போக்கு மின்னலிடுகிறது; சிந்திக்கவைக்கிறது. ''History repeats itself'' என்ற முறையில் பழைய நிகழ்வுகள் மூலம் இன்றைய யதார்த்த கோலங்கள் கலாரூபமாக முன்வைக்கப்பட்டன. சிந்தனைக்கு விருந்தாக அமைந்த இந்த நாடகம் அவையினரை மகிழ்ச்சி நிலையில், ரசனை நிலையில் பெரிதும் ஆழ்த்தியதெனலாம். பொழுதுபோக்கி மகிழ்தல் (Entertainment) மட்டுமல்ல நாடகம் அறிவுறுத்தல் (Instructions) அறிவூட்டுதல் (Education) என்பனவும் இழையோட விடல் உயர்தர நாடகத்தன்மை என்பர் வல்லுநர்கள்.

மகளிரும் ஆண்களுக்குச் சமதையாக ஆடினர். போர்க்காட்சி விறுவிறுப்புடன் அமைந்தது. அத்துடன் ''குழப்பத்தில் ஒழுங்கு கடைப்பிடித்து கலாரூபம் கொடுத்தல்'' என்ற நாடகத்தின் மிக நுட்பமான அம்சம், பல தடவை ஒத்திகைகள் செய்யப்பட்டே மேடையேற்றப்பட்டதென்பதைக் காட்டுகிறது.

நாடகங்கள் மேடையேறலாம் ஆனால் சுவைஞர்களை ஏமாற்றக் கூடாது. கூட்டுமுயற்சியும் வெற்றிக்கு காரணமெனலாம். மேடைக்கு அப்பால் முப்பதுக்கும் மேற்பட்டோர் விசுவாசத்துடன் இயங்கியதை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் கண்டு பிரமித்தேன் நிகழ்வும் உச்சமே.

முல்லைத்தீவுப் பகுதி ஆட்டப் பாணியில் இந் நாடகம் அமைந்தது. ஆடல், பாடல் பயிற்சிகளை முல்லைத்தீவுப் பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் மூவர் துணைகொண்டு றுஷாங்கன் நெறியாள்கை செய்துள்ளார். நெறியாள்கை செய்பவர் சகலகலா வல்லுநராய் இருக்க வேண்டியதில்லை. ஆனால், தெரிந்தவர்களைக்கொண்டு செய்வித்தல் கௌரவக் குறைவல்ல என்ற முறையில் பெருந்தன்மையுடன் இயங்குதல் வெற்றிகாண உதவும். ஆட்ட நயத்தினை எழுத்து வடிவில் காட்ட முடியாது. கண்டு அனுபவிக்கவேண்டிய ஒன்று.

முதலியார், பண்டாரவன்னியன். மந்திரிமார், நாட்டார், வன்னிச்சிகள், போர் வீரர்கள், கட்டியக்காரன் ஆகிய பாத்திரங்களைத் தாங்கியோரின் ஆட்டத்தில் விறுவிறுப்பு இருந்தது. பின்னணி இசையில் கைதேர்ந்தவர்கள் பங்கு கொண்டதால் எந்த இடமும் சோடை போகவில்லை. சில இடங்களில். குரல்வளக் குறைவு நடித்தவர்களிடத்து அமைந்திருந்தது. பட்டறைப் பயிற்சியில் மூச்சுப்பயிற்சி, அட்சர சுத்தியுடன் பேசும் பயிற்சி என்பவற்றில் கூடிய கவனமெடுத்து இக்குறைபாட்டை நாடக உலகம் அடைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. ஆடும்போது தெளிவாகப்பாடுதல் 'சிரமமே அன்றைய நடிகர்களுக்கு கண்டம் கனதி. அவர்கள் சொற்களை அவையினர் நடுவே எறிந்து பேசுவர்; பாடுவர்.

கலைப்பேரரசு
ஏ.ரி. பொன்னுத்துரை

# கும்பாபிஷேக முகூர்த்த நிர்ணயம்; விவரங்களும் சிலவிளக்கங்களும்

ஊருக்கு ஊர் ஆலயங்களில் கும்பாபிஷேகங்கள் நடைபெறுகின்றன. ஆனால் பலருக்கு அது பற்றிய விளக்கம் எதுவுமே தெரியாது. ''நியந்தரி'' அமைப்பின் ஆதரவில் கும்பாபிஷேகம் குறித்த கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அங்கு அந்தணப் பெருமக்கள் பலரும் தெரிவித்த கருத்துக்கள் இங்கு கட்டுரை வடிவில் தொகுத்தளிக்கப்படுகிறது.

குடத்தில் நிறைக்கப்பட்டு மந்திரங்களால் பூசிக்கப்பட்டு தெய்வ சாந்நித்தியம் ஏற்படுத்தப்பட்ட நீரினால் உரிய தெய்வத்தை நீராட்டுதலே கும்பாபிஷேகம் எனப்படும். முகூர்த்தம் என்பது குறிப்பிட்ட ஒரு நேரமாகும். அதன் உண்மையான அளவு இரண்டு நாழிகைகள் மட்டுமே. ஆயினும் சில சந்தர்ப்பங்களில் விநாடிகள் கூடலாம்; அல்லது குறையலாம். குறிப்பிட்ட இந்த நேரம் — முகூர்த்தம் — எப்போது தொடங்கி எப்போது முடிவடைகின்றது என்பதை வரையறுத்தலே நிர்ணயம் எனப்படும்.

கும்பாபிஷேகம் இரு வகைப்படும். ருத்ர கும்பாபிஷேகம், ஸ்நபந கும்பாபிஷேகம் என்பன ஒரு வகை. ருத்ர கும்பாபிஷேகத்தில் ஒரு கும்பமும் ஸ்நபந கும்பாபிஷேகத்தில் ஒன்பது அல்லது அதற்கு மேற்பட்ட கும்பங்களும் இடம் பெறும்.

மஹாகும்பாபிஷேகம் எனப்படும் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் என்பன மற்றைய வகையாகும்.

பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நான்கு வகைப்படும். பொருத்தமான ஓர் இடத்தைத் தெரிவு செய்து கோவிலைக் கட்டி தெய்வச் சிலைகளை உரிய இடங்களில் நிலை நிறுத்தி அவற்றில் அந்தந்தத் தெய்வங்களை எழுந்தருள வைத்துச் செய்யப்படுவது ஆவர்த்தன கும்பாபிஷேகம் எனப்படும்.

முன்னர் கட்டப்பட்டு வழிபாடு இயற்றப்பட்ட கோயில் ஏதோ காரணங்களால் கைவிடப்பட்டுப் பழுதாகிச் சிதைந்திருக்கும் நிலையில் அக்கோயிலைத் திருத்திப் புதுக்கி அங்கே இறைவனை மீண்டும் எழுந்தருள வைத்துச் செய்யப்படுவது அனாவர்த்தன கும்பாபிஷேகம் ஆகும்.

நித்திய நைமித்திகங்கள் நடைபெற்று வரும் கோயில்கள் ஒவ்வொன்றிலும் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை கும்பாபிஷேகம் நடைபெறவேண்டும் விக்கிரகங்களை அவை இருக்கும் இடங்களிலிருந்து எடுத்து, விசேடமாக அமைக்கப்பட்ட இளங்கோயிலில் வைத்து சிலவிட்டு (பாலஸ்தாபனம்) கோவிற்கட்டடங்கள், கோபுரம், விமானம் போன்றவற்றைத் திருத்திப் புதுவர்ணம் தீட்டியபின், இளங்கோயிலிலிருந்து விக்கிரகங்களை மீண்டும் உரிய இடங்களில் நிலை நிறுத்தும்போது செய்யப்படுவது புனராவர்த்தன கும்பாபிஷேகம். பன்னிரண்டு ஆண்டுகள் முடிவதற்கு முன் மேற் குறிப்பிட்ட கட்டடங்கள் போன்றவற்றில் அல்லது அஷ்டபந்தனத்தில் (மருந்து) பழுதுகள் ஏற்பட்டால் பாலஸ்தாபனத்தின் மேல் அவை திருத்தப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்படவேண்டும். இவ்வகையானதும் புனராவர்த்தன கும்பாபிஷேகம் எனப்படும்.

திருடர்கள், கயவர்கள் போன்ற விரும்பத் தகாதவர்களின் செயல்களால் விக்கிரகங்கள் பழுதடைந்தால் அல்லது கோயில் பங்கப்படுத்தப்பட்டோ அசுத்தப்படுத்தப்பட்டோ இருந்தால் அவையெல்லாம் உடனடியாகவே சீர்செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் செய்யப்பட வேண்டும். இது அந்தரித கும்பாபிஷேகம் எனப்படும். இதற்கு முகூர்த்த நிர்ணயம் அவசியமில்லை: நாள் நட்சத்திரம் பார்க்கவேண்டியதில்லை.

முன்னர் குறிப்பிட்ட ருத்ர ஸ்நபந கும்பாபிஷேகங்களுக்கும் முகூர்த்த நிர்ணயம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

தொகுப்பு:
வி. பரமேஸ்வரன்

# வெள்ளைக் கொடி பிடித்து வந்த வன்னி அகதிகள் 'சனச' முகாமில் தவம்

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வருவோரும் போவோரும் படுகின்ற அவஸ்தைகளை கடந்த மடல்களில் பார்த்தோம். இவையெல்லாம் பயணிகளாக வந்து செல்வோர் படும் பாடுகள் தான். ஒவ்வொரு வாரத்திலும் செவ்வாய், வெள்ளி ஆகிய தினங்களில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளின் துணையுடன் பிரமணாளங்குளம் ஊடாக வந்து செல்வோரே இந்தப் பயணிகள் பட்டியலில் படையினரால் சேர்க்கப்பட்டு வருகின்றனர். ஆனால் இது தவிர ஏனைய நாள்களான திங்கள், புதன், வியாழன், சனி, ஞாயிறு ஆகிய நாள்களிலும் பிரமணாளங்குளம் பாதையூடாக மக்கள் வருகிறார்கள் தான். ஆனால் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் துணையின்றி ஏன் விடுதலைப்புலிகளிடமும் பாஸ் அனுமதி பெறாது வெள்ளைக் கொடியைப் பிடித்தபடி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்து சேரும் இவர்களில் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நிரந்தரமாக வசிக்கவென வருகின்றனர். அவர்களுடன் பயணிகள் சிலரும் மற்றும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை உட்படத் தென்பகுதிக்கும் சென்று தமது சொந்த இடங்களில் குடியேறுபவர்களும் வருகின்றனர். இந்தக் கூட்டத்துடன் கூட்டமாக வன்னியிலிருந்து வவுனியாவுக்கு வந்து பொருள்களை வாங்கிச் செல்லும் வியாபாரிகளும் வந்து செல்வது வழக்கம்.

முன்னர் இவர்களையெல்லாம் பஸ்களில் பிரமணாளங்குளத்தில் இருந்து ஏற்றி வந்து வவுனியாவின் கோழிக் கூட்டு முகாம் என்று சொல்லப்படும் 'சனச' இடைத்தங்கல் முகாமில் இறக்கி விடப்படுவர். பின்பு அவர்கள் அங்கே விசாரிக்கப்பட்டு முகாமுக்கு வெளியே செல்ல விரும்புவோருக்கு பாஸ் வழங்கப்பட்டு வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டு வந்தனர். வெளியே செல்ல விரும்பாதவர்கள் அங்கேயே தங்க வைக்கப்பட்டு பின்னர் நலன்புரி நிலையங்களுக்கு மாற்றப்பட்டுவந்தனர்.

ஆனால் தற்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. அண்மையில் பாதுகாப்புக் கெடுபிடிகள் இறுக்கப் பட்டபோது இவ்வாறு வருவோர் தொடர்பான நடவடிக்கைகளிலும் மாற்றம் கொண்டு வரப்பட்டது. இதன்படி தற்போது செவ்வாய், வெள்ளி ஆகிய நாள்களில் வருவோர் தவிர ஏனைய நாள்களில் வவுனியாவில் இருந்து வருவோர் அனைவரும் அகதிகளாகக் கருதப்பட்டு அவர்கள் அனைவரினதும் அடையாள அட்டை மற்றும் ஆவணங்களைப் பறித்து வைத்துக் கொண்டு படையினர் இவர்களை 'சனச' இடைத்தங்கல் முகாமிலேயே கொண்டு சென்று தங்க வைத்து விடுகின்றனர். அவர்களுக்கு வெளியே செல்ல பாஸ் வழங்கப்படுவதுமில்லை.

புதிய நடைமுறை அமுலுக்கு வந்த பின்பு இவ்வாறாக ஆளுக்கு ஆள் ஒவ்வொரு இடத்தில கொண்டு வந்து அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். ஆனால் அவர்களில் 700 பேர் வரையானோர் தாம் வெளியே செல்ல விரும்பிப் பெயர்களைப் பதிவு செய்துள்ளனராயினும் அவர்கள் வெளியே செல்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. பாதுகாப்பு அமைச்சின் முடிவின்படி எவரும் வெளியே செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் சொல்லப்பட்டது.

## வவுனியா வலம்
-ரா. இளவரசன்-

இதனால் அந்த 700 பேரும் மிகவும் மன உளைச்சல் அடைந்தனர். அவர்களில் வன்னியில் இருந்து பொருள்களை வாங்கிச் செல்ல வந்த வியாபாரிகளும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வன்னிக்குத் தமது சொந்தத் தேவைக்காகச் சென்று விட்டுத் திரும்பி வந்தவர்களும் தான் மிகவும் பாதிக்கப்பட்டுப் போயினர். வவுனியாவில் நீண்டகாலமாக வசித்த — வவுனியாவில் வசிப்பதற்கான நிரந்தர வதிவிட அனுமதி அட்டை வைத்திருந்த — பலரும் கூட இவ்வாறு 'சனச' இடைத்தங்கல் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தாம் எப்படியாவது வெளியே சென்றுவிட வேண்டும் என்று பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்ததை அடுத்து வெளியே செல்ல விரும்புவோரின் பட்டியல் ஒன்று வவுனியா செயலக அதிகாரிகளினால் தயாரிக்கப்பட்டு வவுனியாவில் உள்ள படை அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தற்பொழுது இதன் அடிப்படையில் கொஞ்சம் கொஞ்சமாக 'சனச' முகாமில் இருப்போர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

## எதிரொலி..
- இடியன் -

- பாகிஸ்தானால் உளவு வேலைக்கு அனுப்பப்பட்ட ராஜாளிக் கழுகு இந்தியப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.
  - ★ கடுகு சிறிதென்றாலும் அதன் காரம் பெரிது; கழுகு பெரிதென்றாலும் அதன் வீரம் சிறிது என்று சொல்லலாமா?
- பஸ்ஸின் கண்ணாடிகளை மூடிக் கடதாசி ஒட்டப்பட்ட பின்னர் தான் பக்தர்கள் அதில் ஏறித் திருக்கேதீஸ்வரம் செல்ல அனுமதிக்கப்பட்டனர்!
  - ★ 'சுய பக்தி' மட்டுமல்ல 'பய' பக்தியும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கையோ?
- இனப் பிரச்சினை விஷயத்தில் நோர்வேயின் தலையீட்டுக்கு எதிராகப் பௌத்த பீடங்கள் போர்க்கொடி!
  - ★ அதாவது வெளிநாட்டுத் தலையீட்டுக்குத் தம் மதமும் சம்மதமில்லை என்கின்றார்கள்!
- தென்னிந்திய சினிமாப் பாடல்களை ஒப்புவித்துப் பாடுவதோடும் ஆடுவதோடும் நிறைவு கொள்ளும் சமுதாயமொன்று உருவாகி வருவதைப் பற்றிக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.
  - ★ கவலைப்படவேண்டிய விஷயந்தான். இதை இப்படியே விட்டால் " கூடுவதும் ஓடுவதும் " எனவும் நீளலாம்!
- அரச படையிலிருந்து தப்பி ஓடுபவர்களைத் தேடிப் பிடிப்பதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன!
  - ★ தப்புங்கள், பிடிக்கப்படும்!
- சாரதாம்பாள் கொலை விஷயமாக, போதிய ஆதாரங்கள் இல்லாதபடியால், யாரையுமே கைது செய்ய முடியாதிருப்பதாகத் தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது!
  - ★ தன்னுடைய தொல்லை தவிர்க்கப்பட்டுவிட்டது எனக் குழு நிம்மதியடையுமா? அல்லது......?
- தம்மிடம் இருந்த நாலு கைதிகளை விடுதலை செய்த புலிகள், ஏனைய கைதிகளை விடுவிப்பது பற்றி அரசாங்கத்துடன் பேசத் தயார் என்றும் அறிவித்துள்ளனர்!
  - ★ தங்களிடம் வீரமும் வேகமும் மட்டுமல்ல, ஈரமும் விவேகமும் கூட இருக்கின்றன என்பதைக் காட்டுகின்றார்களோ?
- நவாஸ் ஷெரீப்பிற்காக நீதி மன்றத்தில் வாதாடும் வழக்கறிஞர்கள் மூவர், பட்டப் பகலில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனராம்!
  - ★ பேய் ஆட்சி செய்தால் பிணத்தின் தொகைபெருகும்!
- ஆயுதப் போட்டியில் பாகிஸ்தான் இறங்காது என ஜெனரல் முஷாரப் கூறுகிறார்!
  - ★ 'இறங்காது' என்றால், 'ஏறும்' என்பதுதானே அர்த்தம்!
- போதனையை உரிய முறையில் நிறைவு செய்வதாக அதிபர்கள், ஆசிரியர்கள் உடன்படிக்கையில் கையொப்பமிட வேண்டும்!
  - ★ பாடப் புத்தகங்களை உரிய காலத்தில் அனுப்புவதாகக் கல்வித் திணைக்கள அதிகாரிகள், உடன்படிக்கையில் கையொப்பமிடுவார்களா?

# தமிழகத்து எழுத்தாளர்கள் பலருக்கு ஈழத் தமிழர்களை விளங்கவில்லை!

## உரிமைப் போராட்டத்தையும் புரிந்து கொள்ளவில்லை!!

தமிழகத்துக்கு அண்மையில் விஜயம் செய்து திரும்பிய முதறிஞர், எழுத்தாளர் சொக்கன் அவர்களுடன் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் அவர் பகிர்ந்து கொண்ட அனுபவங்களின் தொகுப்பு கடந்த வாரம் (05. 03. 2000) சூரியகாந்தியில் வெளியானது.

அதே நிகழ்வில் எழுத்தாளர் அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை 37 ஆண்டுகளுக்கு முன்னர் தாம் தமிழகத்துக்கு விஜயம் செய்தபோது ஏற்பட்ட அனுபவங்களை எடுத்துச் சொன்னார். அவரது பேச்சின் தொகுப்பு இது.

37 ஆண்டுகளுக்கு முன்பு, கல்யாணம் செய்த புதிதில் மனைவியுடன் தமிழகம் சென்றேன் தேன்நிலவிற்காக. நான் இந்திய வரலாறு படித்தவன். அதனால் தென்னிந்தியாவில் உள்ள கோயில்கள், அவற்றிலுள்ள சிற்பங்கள் பற்றி நன்கு அறிந்திருந்தேன். அந்தக் கோயில்களில் நடைபெறும் வழிபாட்டு முறைகள் பற்றியும் பிறர் சொல்லக் கேட்டறிந்திருந்தேன். எனவே பெரிய எதிர்பார்ப்புக்களுடன் தான் போனேன். எனக்குக் கிடைத்ததோ பெரிய ஏமாற்றம்.

பிரம்மாண்டமான அழகான கோயில்கள்; மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைப் பார்த்து வியந்தேன். தஞ்சைப் பெரிய கோயிலைப் பார்த்த பொழுது மெய் சிலிர்த்தது. அந்த அளவு பெரிய கம்பீரமான கோயில் இந்திய உபகண்டத்தில் வேறு எங்கும் இல்லை என்று நினைக்க நெஞ்சு பெருமிதத்தில் விம்மியது. ஆனால் அதே ஆலயங்களின் அருகிலேயே அசிங்கம்.

தில்லைச் சிதம்பரத்திற்குச் சென்றேன் சிதம்பர இரகசியம் பார்க்க. பக்கத்தில் சிவகங்கைத் தீர்த்தம். பாசி படிந்த கேணி. அதன் படிக்கட்டிலேயே மலங்கழித்திருந்தார்கள். அதில் கால் கழுவக் கூட அருவருப்பாக இருந்தது. பழனி மலைக்கருகில் சரவணப் பொய்கை. மாரி காலமானதால் குளத்தில் நீர் ததும்பிக் கொண்டிருந்தது. சரவணப் பொய்கையில் நீராடலாம் என்றார்கள். பார்த்தேன். ஆடு, மாடு, எருமை, குதிரை எல்லாம் அதில் தான் குளிப்பு நான் கிணற்றில்தான் நீராடினேன். பெரிய தலங்கள் எல்லாம் இப்படித்தான்.

இந்து ஆலயங்களில் பூசை வழிபாட்டு முறைகளெல்லாம் வியாபார மயமாக்கப்பட்டிருந்தன. சுவாமிக்கு தங்கக் கிரீடம் சாத்த இவ்வளவு காசு, வெள்ளிக் கிரீடம் சாத்த இவ்வளவு காசு, பித்தளைக் கிரீடத்திற்கு இவ்வளவு என்று றேட் பேசுகிறார்கள். தீபங்களுக்கு ஏற்ப அர்ச்சனைக் காசுகளும் அறவிடப்படுகின்றன. யாத்திரிகர்களை பூசைக்கு அழைத்துச் சென்று காசு வாங்கிக் கொடுக்க முகவர்களே இருந்தார்கள். தமிழகத்தின் கோயில்களில் இருந்த வழிபாட்டு நடைமுறைகளைப் பார்க்க எனக்கு இருந்த பக்தியும் போய்விட்டது. ஆலயத்துக்குப் போனதற்காக ஏதோ வழிபாடு செய்து கொண்டு திரும்பினேன்.

'மட்றாஸ்' பெரிய நகரம் தான். வரிசை வரிசையாக மாடிக் கட்டடங்கள். அகன்ற வீதிகள். ஆனால் பிரதான வீதிகளில் மட்டும்தான் சுத்தம். சந்து பொந்துகளில் நுழையவே முடியாது. குப்பை, கூழம், மலம், மணம் சென்னை மட்டுமல்ல, அழகு நகரான மதுரையும் அப்படித்தான். எங்கும் பிச்சைக்காரர்கள், தொழுநோயாளர்கள் அவர்களுடன் போட்டி போடுகின்றனர். எனக்கு இந்தியாவே வேண்டாம் என்று வந்துவிட்டது.

அன்றைய இந்தியாவுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் எங்கள் யாழ்ப்பாணம் அன்றல்ல இன்றும் சொர்க்கம் தான்!

இங்கே பலர் தமிழக எழுத்தாளர்களைச் சந்திக்க ஆசைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களைச் சந்திப்பதொன்றும் இலேசான காரியமல்ல. அவர்களெல்லாம் படுபிஸியான மனிதர்கள். இன்று அவர்கள் தொலைக்காட்சிக்கும் சினிமாவிற்கும் பத்திரிகை, சஞ்சிகைகளுக்கும் முழு மூச்சுடன் எழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஓர் எழுத்தாளர் ஒரே நேரத்தில் பல சஞ்சிகைகளுக்குத் தொடர் கதைகள் எழுதுகிறார். வெளியீட்டாளர்களுக்கும் நூல்கள் எழுதிக் கொடுக்கிறார்கள். அங்கே பிரபல எழுத்தாளர்களுக்கு வாய்ப்புகள் அதிகம்.

எம்மவர்கள் அவர்களைச் சந்தித்துத்தான் என்ன செய்யப் போகிறார்கள்? அவர்களில் பலருக்கு இலங்கைத் தமிழரையும் விளங்கவில்லை. எங்களது இன விடுதலைப் போராட்டமும் புரியவில்லை. இந்திய மத்திய அரசுக்கு இலங்கைத் தமிழர் மீது உள்ள அக்கறை கூட தமிழகத்து எழுத்தாளர்களுக்கு எங்கள் மீது இல்லை! அவர்கள் வேகமாக எழுதி எழுதிக் காசு உழைப்பதிலேயே கண்ணாயிருக்கிறார்கள்! உதாரணத்திற்கு ஒன்று.

பாலகுமாரன் என்ற எழுத்தாளர் இலங்கைத் தமிழரைப் பற்றிய ஒரு கதை எழுதினார்.. இங்கே உள்ள விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவர் சென்னையிலுள்ள ஒரு தமிழரைப் பார்க்கப்போகிறார். அவர் அங்கே மது அருந்துகிறார். சிகரெட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளைக் கொடி...

(7 ஆம் பக்கத் தொடர்)

படையினரால் அனுமதி வழங்கப்பட்டு வருகின்றனர். எனினும் பலரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டும் வருகின்றன. உதாரணமாக யாழ்ப்பாணம் செல்ல 50 பேர் வரையில் விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருந்தனராயினும் அதில் 40 பேருக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதில் 27 பேர் அண்மையில் யாழ்ப்பாணம் சென்ற 'லங்கா முடித்த' கப்பல் மூலம் திருகோணமலை ஊடாக அனுப்பப்பட்டு விட்டனர். எஞ்சியோர் அடுத்த கப்பலில் செல்லத் தயாராக இருக்கிறார்கள். இதேபோல மன்னார் செல்ல விண்ணப்பித்தோரில் 300 பேருக்கு அனுமதியைப் படையினர் வழங்கி அவர்கள் கடந்தவார ஆரம்பத்தில் அனுப்பப்பட்டு விட்டனர், அடுத்து வன்னிக்குத் திரும்பிச் செல்ல விரும்பியவர்களினதும் வவுனியாவில் தமது உறவினர்களுடன் சென்று வாழ விரும்புகிறவர்களின் விண்ணப்பங்களும் தற்போது படை அதிகாரிகளின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இவர்களுக்கும் இலகுவில் அனுமதி கிடைத்து விடலாம் என்று நம்பப்படுகிறது.

ஆனால் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் தென்பகுதிக்குச் செல்ல விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்கள் தான் இழுபறிநிலையில் இருக்கின்றனவாம். இவர்கள் எங்கு சென்று வாழ விரும்புகிறார்களோ அங்கு அவர்களைப் பற்றி விசாரித்து அறிக்கைகள் கிடைத்த பின்னரே விரும்பி விண்ணப்பித்த இடங்களுக்குச் செல்ல இவர்கள் அனுமதிக்கப்படுவர்என்று படையதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அதற்கு இன்னும் பல மாதங்கள் செல்லலாம். அதுவரை அவர்கள் 'சனச' இடைத்தங்கல் முகாமிலேயே முடங்கிக் கிடக்கவேண்டும்.

இந்தக் கெடுபிடிகளால் எதுவும் வேண்டாம் என்று அடையாள அட்டை, வதிவிடப்பாஸ் எதுவுமின்றி 'சனச'முகாமில் இருந்து பலர் தப்பிச் சென்றுவிட்டனர், அப்படித் தப்பிச் சென்ற இளைஞர் ஒருவர் காணாமல்போய் விட்டதாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இவ்வாறான இழுபறிநிலைகளினைக் கேள்விப்பட்டுத் தற்போது பிரமணாளங்குளம் பாதையூடாக செவ்வாய், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் அகதிகள் என்ற பெயரில் வருவோரின் எண்ணிக்கை குறைந்து விட்டது.

★

## தமிழகத்து...

(7 ஆம் பக்கத் தொடர்)

பிடிக்கிறார். இளம் பெண்களுடன் கூடிக் கூத்தடிக்கிறார். இங்கே புலிகள் செய்யாதது எல்லாவற்றையும் அங்கே அவர் செய்கிறார். இவ்வளவு தான் தமிழகத்து எழுத்தாளர் இலங்கைத் தமிழர் பற்றியும் அவர்களது, உரிமைப்போராட்டம் குறித்தும் அறிந்து வைத்திருப்பது!

எங்களது பிரச்சினைகள் எங்களுக்குத்தான் விளங்கும். இலங்கைத் தமிழரது பிரச்சினைகள் பற்றி நாங்கள் தான் எழுத வேண்டும்! ★

# கர்ம வீரர்...

(5 ஆம் பக்கத் தொடர்)

★ தம்பி! உன்னை இங்கே கொண்டுவந்தது யார்?

● பொலீஸார் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

★ எங்கேயிருந்து அவர்கள் உன்னைக் கூட்டிக் கொண்டு வந்தார்கள்?

● யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்திலிருந்து கூட்டிவந்தார்கள்.

★ உனது சொந்த ஊர் எது?

● பூவரசங்குளம்.

★ அது எங்கேயுள்ளது?

● வவுனியாவிலிருந்து மன்னாருக்குப் போகும் வழியிலுள்ளது.

★ நீ எப்படி யாழ்ப்பாணம் பொலீஸ் நிலையத்தை அடைந்தாய்?

இவ்வாறு வினாவும் விடையுமாய் வந்த கதை பின்வருமாறு:

அநாதைச் சிறுவன் நகுலனின் தந்தை, நகுலனுக்கு ஆறு வயதானபோது இறந்து விட்டார். நகுலனுக்கு இரண்டு சகோதரரும், ஒரு சகோதரியுமிருந்தனர் இந்நிலையில் நகுலனின் தாயார் மறுதாரம் மணமுடித்தார். சிறிய தந்தையார் குடிப்பழக்கமுடையவர். அவரின் கொடுமை அக்குழந்தைகளால் தாங்கமுடியவில்லை. முக்கியமாக நகுலனாற்றாங்கமுடியவில்லை. அவன் பிஞ்சுள்ளம் வீட்டிலிருந்து வெளியேறுமாறு அவனைத் தூண்டிற்று. ஒருநாள் புறப்பட்டேவிட்டான்; மனம் போனபடி நடந்தான். ஒரு பைசிக்கிள் வண்டி வந்தது. அவன் பின்புறமாக ஏறி வவுனியாவை அடைந்தான். ஒரு ''மோட்டார் லொறி' யைக் கண்டான்; அது பாரம் ஏற்றியபடி நின்றது; அதன் சாரதியின் உதவியால் 'லொறி' மூலம் கெக்கரியாவை அடைந்தான். அங்கேஇறங்கிய அவன் ஒரு 'பெற்றோல்' நிலையத்தண்டை படுத்திருந்தான். நித்திரையாயிருந்த அவனை யாரோ எழுப்பினார்கள். பொலீஸார்! அவர்களுக்குத் தன் கதையைச் சொன்னான் நகுலன். அவர்கள் அவனை அழைத்துச் சென்று அநுராதபுரி கோட்டில் ஒப்படைத்தனர். நீதிவான் நகுலனது துன்பக் கதையைக் கேட்டு யாழ்ப்பாணம் சைவ அநாதை சாலைக்குப் பொலீஸாருடன் அனுப்பி வைத்தார். சைவ அநாதைசாலையின் சிறப்பு அநுராதபுரிக் கோட்டுக்குச் சென்றமை ஆச்சரியமன்று. ஆயின் கால்போன வாக்கிற் சென்றநகுலன் மகிழ்ச்சியோடு கல்விவசதி பெற்று வாழ வசதி கிடைத்தது ஆச்சரியந்தான்!

இன்னுமொன்று:—

திருநெல்வேலி முத்துத்தம்பி • வித்தியாசாலையின் இப்போதைய தலைமையாசிரியர் — இனி வரவிருக்கும் தலைமையாசிரியர்கள் அத்தனை பேரதும் சுவீகாரப் புத்திரன்ஒருவன் இப்பொழுது சைவ அநாதைசாலையில் வளர்கின்றான். அவன்தான் முத்துலிங்கம்!

அவன் தன் பெற்ற தாயையும் அறியான் தந்தையையும் அறியான். கொழும்பு மாநகரில் கந்தலுடையுடன் எச்சிலிலை பொறுக்கியுண்ட முத்துலிங்கம் அரசினர் உத்தியோகத்தர் ஒருவருடைய (Probation Officer) உதவியாற்சைவ அநாதைசாலையை அடைந்தான். அரசாங்க உதவியோடு ஒரு நிபந்தனையுடன் அனுப்பி வைக்கப்பட்டான். அரசாங்கம் மாதம் 30 ரூபா வீதம் சில காலத்துக்கு அவனுக்கு உபகாரப் பணம் அனுப்பி வைக்கும். ஆயின் அவன் முத்துத்தம்பி வித்தியாசாலைத் தலைமையாசிரியரின் 'சுவீகாரப் புத்திரன்' என்பது அந்நிபந்தனை. அவன்தான் இலங்கையின் எதிர்கால ஆட்சித்தலைவனோ யாரறிவார்! ஆனால் அவன் இப்பொழுது குஷியாய் வாழ்கிறான்.

''அநாதைகளுக்கு ஆண்டவன் துணை உண்டு; சைவ அநாதைசாலை உண்டு. என்றாவது ஒரு சிறு மன நிம்மதி உண்டல்லவா சைவ அநாதைசாலையால். ஆனால் அவ்வநாதைசாலைச் சிறுவர்மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கு சிறுமிகள் நீராட ஒரு தொட்டியும் ஆராதனை மண்டபமொன்றும் இப்போதைக்குக் கிடைத்து விட்டால்'' என்று கூறிக் குறைப்பட்டார் தலைமையாசிரியர் கடைசியாக.

★

# நான்காவது முறையாக....

(6 ஆம் பக்கத் தொடர்)

னம் தரும் தொழிலாகக் கொண்டுள்ளது. எனவே சிறிலங்காவில் இருந்து சென்ற தமிழ் மக்களின் சேவை அந்நாட்டுக்கு மிகவும் தேவையாக உள்ளது. நோர்வே சென்ற பின்னர் அந்த மக்கள் கல்வி கற்றனர். அந்நாட்டு நிறுவனங்களில் முக்கிய பதவிகளுக்குக் கூட நியமனம் பெற்றனர். இந் நிலையில் தான்நோர்வே நாட்டில் பிரபலமான சக்தியாக உருவெடுக்க அவர்களால் முடிந்தது. காலம் செல்லச் செல்ல இந்தச் சக்திக்குள் விடுதலைப்புலிகள் ஊடுருவினர். நிலைமையைச் சாதகமாக்கி தமது செயற்பாடுகளை விரிவாக்க விடுதலைப் புலிகளுக்கு வாய்ப்பேற்பட்டது.நோர்வே நாட்டில் தமிழர்களுக்கெனத் தனிக் கிராமங்கள் கூட உருவாக்கப்பட்டுள்ளன. புலிகளின் பணிமனைகள் கூட அமைக்கப்பட்டன. காலப் போக்கில் நோர்வே நாடும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவை வழங்கும் அணுகுமுறையைப் பின்பற்ற ஆரம்பித்தது. கடந்தகாலங்களில் சிறிலங்கா அரசால் கிராமம் கிராமமாக எடுத்துச் செல்லப்பட்ட 'தீர்வுப் பொதித்' திட்டத்திற்கு நிதியுதவி வழங்கியது நோர்வே அரசாகும். நாடாளுமன்ற உறுப்பினர்களைநோர்வேக்கு அழைத்துச் சென்று அங்கு வைத்து அவர்களுக்கு'மூளைச் சலவை' கூட மேற்கொள்ளப்பட்டது.

இவ்வாறு நீண்ட காலத் திட்டத்தைக் கொண்டிருந்த நோர்வே நாட்டின் செயற்பாடுகள் தற்போது உச்சஸ்தாயி நிலையை அடைந்துள்ளன. நோர்வே நாடு தற்போது நேரடியாகவே சமாதானத் தூதுவராக மாறியுள்ளது. நோர்வே நாட்டின் வெளிவிவகார அமைச்சர் முதலில் சந்தித்தது அன்ரன் பாலசிங்கத்தையேயாகும். பாலசிங்கத்திற்குத் தேவையான விவரங்களை அறிந்து கொண்ட பின்னரே இங்கு வந்த நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதியைச் சந்தித்துள்ளார். அவர் அன்ரன் பாலசிங்கத்திடமே பிரச்சினை தொடர்பான அனைத்து விவரங்களையும் விசாரித்து அறிந்துள்ளாரே தவிர எம்மிடம் பிரச்சினை குறித்து எதையும் கேட்டறியவில்லை.

இந்த நாட்டின் 74 சதவீத சனத் தொகையினரான சிங்களவர்களின் பிரதிநிதிகளிடமிருந்து நோர்வே வெளிவிவகார அமைச்சர் எதையும் கேட்டறியவில்லை.

இதற்கிடையில் தர்மலிங்கம் சித்தார்த்தன் புலிகளுக்காக ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதாவது நாங்கள் பேச்சுவார்த்தைகளுக்கு செல்வதாயின் அதற்கு முன்னராக வடக்கு—கிழக்கிலிருந்து இராணுவம் முற்றிலுமாக வாபஸ் பெறப்பட வேண்டும். தடை செய்யப்பட்ட அனைத்துப் பொருள்களும் கிடைக்க வழி செய்ய வேண்டும் என்பனவாகும். 'இதுநான்காவது முறையாக எம்மைப் பொறியில் வீழ்த்த எடுக்கும் முயற்சியாகும்.'

1994 இல் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட கால எல்லையில் விடுதலைப்புலிகள் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்களைக் களவாகக் கொண்டு வந்தனர் என்பதை எமது வெளிவிவகார அமைச்சரே ஏற்றுக் கொண்டுள்ளார். சமாதானப் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதை மீண்டும் மீண்டும் யுத்தம் செய்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பாக விடுதலைப்புலிகள் பயன்படுத்தியுள்ளனர். இதற்காகவே தான் வடக்கு—கிழக்கிலிருந்து முற்றிலுமாக இராணுவம் வாபஸ் பெறப்பட வேண்டும் என ஆரம்பத்திலேயே கோரிக்கை விடப்பட்டுள்ளது.

எமக்குப் பெரிய அளவில் வெளிநாட்டு உதவியை வழங்கும் நாடு நோர்வேயாகும். எனவே தான் எமது நாட்டின் மீது அவர்கள் அதிகாரங்களை, அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்பட்டுள்ளனர். எப்படியோ நோர்வே அரசு சமாதான தூதுவராக மாறியுள்ளது. மற்றுமொரு முக்கியமான விடயமும் உள்ளது. அதாவது இந்தப் பிரச்சினையில் இந்தியாநடுவராக இருப்பதைவிட நோர்வேநடுவராக இருப்பதைப் பிரபாகரன் மிகவும் விரும்புகிறார்.

விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டை நோர்வே நாடு பெரும்பாலும் ஏற்றுக் கொள்வதாலேயே அவர்கள் நோர்வே நாட்டை விரும்புகின்றனர்.

எமது அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வினைக் காண முற்படுகையில் இந்தியாவை இப்பணியில் ஈடுபடச் செய்யாமல் நேரடியாக நோர்வே நாட்டை நடுவராகப் பயன்படுத்த முற்பட்டதானது இந்தியாவுக்கு மனக்கசப்பை ஏற்படுத்தும்; பிரதி விளைவுகளை உருவாக்கும். 1987 ஆம் ஆண்டில் எமது ஜனாதிபதி ஜே ஆர். அமெரிக்க சார்புக் கொள்கைகளைக் கடைப்பிடித்த காரணத்தினாலேயே இந்தியா அக் காலகட்டத்தில் புலிகளை ஊட்டி வளர்த்தது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. தற்போது கூட சிறிலங்கா அரசு மேற்கொண்டுள்ள முடிவு குறித்து பலம் மிக்க அயல் நாடான இந்தியா ஏதோ விதத்தில் மனக்கசப்படைந்தால் அது இப்பிரச்சினைக்கு பிரதி விளைவுகளைக் கட்டாயம் உருவாக்க வாய்ப்புகள் உள்ளன.

எமக்கு சமாதானம் தேவைதான் அதில் பிரச்சினை ஏதுமில்லை. ஆனால் நோர்வே வெளிநாட்டு அமைச்சர் எமக்குப் பல விடயங்களை எடுத்துக் கூறுகிறார். இந்த விடயங்கள் எதையாவது ஏன் அவர் தனது நாட்டில் நடைமுறைப் படுத்தவில்லை? இவர்கள் எமது நாட்டைப் பிரிப்பது குறித்து பேசி வருகின்றார்கள்.

நோர்வே அரசின் மீது ஏதாவது வெளிநாட்டு அழுத்தங்கள் மேற்கொள்ளப்படின் அல்லது வெளிநாட்டவர் எவராவது அந் நாட்டிற்குள் நுழைய முற்படின் அவ்வாறு நுழைய முற்பட்டவருக்கான அனுமதியை வழங்க நாடாளுமன்றத்தின் நான்கில் மூன்று பெரும்பான்மையினர் ஒப்புதலை வழங்க வேண்டும். அவ்வாறு இல்லை எனில் மாற்றானுக்கோ அல்லதுமாற்றாருக்கோ அந்நாட்டிற்குள் நுழையவோ அல்லது அழுத்தங்கள் கொடுக்கவோ முடியாது. அந்நாட்டில் பல்வேறு இனமக்கள் வாழ்கின்றனர். இருப்பினும் அவர்களுத்குத் தனித் தனி நாடுகள் வழங்குவது தொடர்பாக நோர்வே எப்போதாவது முயன்றதா? நோர்வே நாட்டின் சட்டங்களை இந் நாட்டில் அமுல்படுத்தினால் கட்டாயமாக அரசமொழியாக சிங்களமும் அரச மதமாக பௌத்தமுமே ஆக்கப்பட வேண்டும். இவ்வாறு இருக்கையில் அவர்கள் இங்கு வந்து எமக்கு வேதம் ஓதுகிறார்கள்.

நோர்வே உட்பட ஸ்கன்டிநேவிய நாடுகள் அனைத்தும் அன்றிலிருந்து இன்றுவரை விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான போக்கையே கடைப்பிடித்து வருகின்றன.

இந்நிலையில் நடுவராகச் செயற்பட நோர்வே நாட்டிற்கு இருக்கும் தகுதிகள் குறித்துச் சந்தேகங்கள் எழுகின்றன. இருப்பினும் இவற்றையெல்லாம் விஞ்சும விதத்தில் அரசு மீது சர்வதேச அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இதன் பின்னணியில் உதவி வழங்கும் நாடுகளும் உலக வங்கியும் செயற்படுகின்றன. அவை எமது ஏழ்மையைப் பயன்படுத்தி அதனூடாக அழுத்தங்களைப் பிரயோகிக்க முற்படுகின்றன. தற்போது வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள தீர்வானது முன்னர் தீர்வுப் பொதி என்ற வடிவில் வெளியிடப்பட்டது. ஆனால் இப்போது பிறக்கவுள்ள பிள்ளை முன்னையதை விட ஊனமுற்றதாகவே இருக்கும்.

இப்போது இங்கிலாத்தைச் சேர்ந்த 'பொக்ஸ்' சிறிலங்காவின் அதிகாரம் பகிர்ந்தளிப்பது குறித்துப் பேசி வருகிறார். அயர்லாந்துக்கு அதிகாரத்தை பகிர்ந்தளிக்க இங்கிலாந்தால் முடிந்ததா? எவராவது அமெரிக்க குடியுரிமை பெற வேண்டுமேயாயின் கட்டாயமாக அமெரிக்க வரலாற்றைக் கற்றறிய வேண்டும். அமெரிக்க வரலாறு தொடர்பாக வழங்கப்படும் வினாத்தாளுக்குத் திருப்தியான விதத்தில் விடையளித்தால் மாத்திரமே அவர்களுக்கு அமெரிக்காவில் குடியுரிமை வழங்கப்படுகிறது. இவ்வாறு இருக்கையில் ஏன் இவர்கள் எங்களுக்குப்புதுமையான ஜனநாயகக் கொள்கைகள் குறித்து விளக்கமளிக்க முனைகிறார்கள்? இந்தியா, பாகிஸ்தான் மற்றும் மலேசியா போன்ற நாடுகளைத் துண்டு துண்டாக்க முனையும் இந்த முதலாளித்துவ நாடுகள் எங்கள் நாட்டையும் துண்டாட முனைகின்றன. நாங்களும் அந்த வலையில் சிக்கியுள்ளோம். எனவே அரசாங்கமும் ஐ. தே. கட்சியும் தங்கள் தனிப்பட்ட நோக்கங்களை ஒருபுறம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, இந்தப் பிரச்சினையை உரிய முறையில் அடையாளம் கண்டு தேசியக் கொள்கை ஒன்றை உருவாக்க வேண்டும்- அவ்வாறு இல்லையெனின் இந்தப் பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வுகாண முடியாது. தேசியக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டு அதுகுறித்து உலகுக்கு எடுத்துரைக்க வேண்டும். நோர்வே அரசு கூறுவதையெல்லாம் நாங்கள் செய்யவேண்டுமென்பதல்ல. பாருங்கள்! நோர்வே வெளிவிவகார அமைச்சர் இங்கு வந்தபோது எங்கள் அரசமைப்பு விவகார அமைச்சரைக்கூடச்சந்திக்கவில்லையே. எனவே அவர்கள் (நோர்வே அரசு) கூறுவதை மாத்திரம் நாங்கள் கேட்கும் அளவிற்கு நாங்கள் அவ்வளவு மடையர்களா? அல்லது அறிவிலிகளா? எமது உள்விவகாரங்களுக்குத் தீர்வுகாணும் அளவிற்கு எம்மிடம் ஆற்றல் இல்லையா?

## கும்பாபிஷேக.......

(6 ஆம் பக்கத் தொடர்)

அவசியமில்லை; பிரம்மோற்ஷவ வேளைகளிலும் விசேட, புண்ணிய தினங்களிலும் கோயில்களில் இத்தகைய கும்பாபிஷேகங்கள் நடைபெற்று வருகின்றன.

(வளரும்)

# இழக்கப்பட்ட கால்நடைகளின் விவரம் கோப்பாயில் சேகரிப்பு

வலி. கிழக்கு, மார்ச் 12

கோப்பாய் கால் நடை அதிகாரி பிரிவில் அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிப்பதற்கும் உதவிகள் வழங்குவதற்கும் கால்நடைகள் சம்பந்தமான விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

கிராம சேவையாளர்கள் பிரிவு தோறும் இடப்பெயர்வு காரணமாக இழக்கப்பட்ட கால்நடைகள், தற்போது உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை விவரங்களே திரட்டப்பட்டு வருகின்றன.

இடப்பெயர்வின் போது கால்நடைகளை இழந்தவர்கள் உரிய ஆவணத்தோடு (பொலீஸ் அறிக்கையோடு) கோப்பாய் கால்நடை அதிகாரி அலுவலகத்திற்கு நேரில் வருகை தருமாறு கால்நடை வைத்திய அதிகாரி கேட்டுள்ளார்.

(ஐ-180)

## வலிகாமம் கிழக்கில்

# உலக உணவுத்திட்ட நிவாரணம் 163குடும்பங்களுக்குக் கிடைக்கும்

வலி. கிழக்கு, மார்ச் 12

இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் நலன் புரிநிலையங்களில் தங்கியுள்ளோருக்கு உலக உணவுத் திட்ட நிறுவனத்தினால் குடும்பம் ஒன்றிற்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபா உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட உள்ளன.

உரும்பிராய்ப் பகுதியில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் வசித்து வரும் 163 குடும்பங்களும் இப்பயனைப் பெறவுள்ளன.

இவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகவும்—

மிக விரைவில் இவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகவும்—

பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்—

இதேவேளை—

உலக உணவுத் திட்ட நிவாரணம் வழங்கியதும் இவர்களுக்கு தற்போது அரசினால் வழங்கப்பட்டு வரும் நிவாரணம் நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-180)

# வாக்காளர் இடாப்புப் பிரதி பெறுவதில் பல சிரமங்கள்

## பாதிக்கப்பட்டோர் விசனம்

வலி. வடக்கு, மார்ச் 12

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தோர் வாக்காளர் இடாப்புப் பிரதி பெறுவதில் பல சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

வாக்காளர் இடாப்புப்பெறுவதற்கு நடைமுறையில் உள்ள பல நிபந்தனைகள் காரணமாகவே சிரமம் ஏற்படுவதாகப் பலரும் முறையிடுகின்றனர்.

யாழ். செயலகத்தில் உள்ள தேர்தல் அலுவலகத்தில் வாக்காளர் இடாப்புப் பிரதி பெற 10 ரூபா பெறுமதியான முத்திரையும் 30 ரூபா பணமும் செலுத்த வேண்டும்.

இதைவிட வாக்காளர் இடாப்புப்பிரதி பெறக்கிராம அலுவலரின் சிபார்சுக் கடிதம் — என்ன நோக்கத்துக்காகப் பெறப்படுகிறது என்ற விவரத்துடன் — சமர்ப்பிக்கப்படவேண்டி உள்ளது என்றும் —

அத்துடன் யாருடைய வாக்காளர் அட்டை பெறப்படுகிறதோ அவரே நேரில் சமுகமளிக்க வேண்டும் என்று கேட்கப்படுவதாகவும் —

விண்ணப்பித்த பலர் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது அடையாள அட்டை, தொழில் வாய்ப்பு மற்றும் நஷ்டஈடுபெறுதல் போன்ற பல தேவைகளுக்கு வாக்காளர் இடாப்புப் பிரதி அவசியமாக உள்ளது. எனவே அதனை இயன்றளவு விரைவாகப் பெற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வசதி செய்ய வேண்டும் என்று பாதிக்கப்பட்ட சிலர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.


## வாழ்த்துகின்றோம்

இன்றைய தினம் கொழும்பில்
காயத்ரீ 'ஸ்வீகரணம்' செய்யும்
சர்வதேச இந்து மத குருபீடத் தலைவர்
ஸ்ரீ ஐயப்பதாச சாம்பசிவ சிவாசார்யரின்
பிரிய குமாரன்
சிரஞ்சீவி சாம்பசிவ மணிகண்டசர்மா
சிறப்புற வாழ காயத்ரி பீடம் வாழ்த்துகின்றது.

தா. மகாதேவக் குருக்கள்
அதிபர் தர்மசாஸ்தா குருகுலம்
இணுவில்.

(74377)



## யா/செங்குந்த இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்
## வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: 26-3-2000 ஞாயிறு மாலை 5 மணி

இடம்: கல்லூரி ப. மா. சங்க அலுவலகம்

அங்கத்தவர்கள் பிரேரணைகள் அல்லது புதிய அங்கத்தவராக 23 – 03 – 2000க்கு முன் விண்ணப்பிக்கவும். பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களுக்கு பணப்பரிசு வழங்கிக் கௌரவிக்கப்படும். புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறும்.

தவறாது சமுகமளிக்கவும்.

லயன் வ. பரமசிவம்
செயலாளர்

கா. இராதா கிருஷ்ணன் L.L.B
தலைவர்

(74386)


## சஞ்சிகை

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களை உள்ளடக்கிய சஞ்சிகை ஒன்று மிக விரைவில் மேற்படி வலயத்தால் வெளியிடப்பட உள்ளது.

(ஐ-133)

## திருக்குறள் மனனப் போட்டி

வலிகாமம் தெற்கு, மார்ச் 12

வலிகாமம் கல்வி வலயபாடசாலை மாணவர்கள் மத்தியில் திருக்குறள் மனனம் செய்யும் போட்டி வலய மட்டத்தில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் வெற்றியீட்டி பரிசு பெறுவோர் விவரம் வருமாறு:

★ நிலை 1 இ. சுஜிதா – ஏழாலை புனித இசிதோர் றோ. க. பா.

★ நிலை 2 - ஐ. தனுஜா அளவெட்டி வடக்கு அ.மி.த க. பா

★ நிலை 3 உ. சகானா மானிப்பாய் சோதிவேம்படி வித்தி.

★ நிலை 4 க. கிருஷ்ணா மகாஜனக் கல்லூரி

★ நிலை 5 க. நிரோபிகா இராமநாதன் கல்லூரி.

(ஐ – 152)

## புதிய தலைவரை நியமிக்க ஏற்பாடு

வடமராட்சி, மார்ச் 12

பருத்தித்துறை நகரசபையின் தலைவராக அந்தோனிப் பிள்ளைவின்சன்கென்னடியை நியமிக்க புளொட் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

முன்னைய தலைவரான புளொட் அமைப்பைச் சேர்ந்த வி. விஜயரட்ணம் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து வெற்றிடமாக உள்ள பதவிக்கே இவர் நியமிக்கப்படவுள்ளார்.

வின்சன் கென்னடி தற்போது இச் சபையின் உப தலைவராக இருந்து வருகிறார். (ஐ-173)

## நினைவுக் கூட்டம்

குருநகர், மார்ச் 12

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரும் உலகப் புகழ்பெற்ற மாக்சிசவாதியுமான நா. சண்முகதாசனின் நினைவுக் கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி மண்டபத்தில் அதிபர் எஸ். சண்முகநாதன் தலைமையில் நடைபெற உள்ளது.

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் கா. நடராசா, அரசவிகிதர் சேவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் இ. தவராசா, மூத்த பத்திரிகையாளர் வீ. சின்னத்தம்பி, இளைப்பாறிய அதிபர் க. திருநாவுக்கரசு, இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த சோ. சிவபாலன் ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்துவர். (ஐ-51)

# இடமாற்றம் பெறும் மதகுருவுக்கு மக்கள் கௌரவமும் பட்டமும்

நெல்லியடி, மார்ச் 12

சுமார் 6 வருடகாலம் பருத்தித்துறைப் பங்குத் தந்தையாகப் பணிபுரிந்து யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றலாகிச் சென்ற அருட்திரு பி. எம். இம்மனுவேல் அடிகளாருக்குப் பருத்தித்துறைப் பங்கு மக்களினால் "பணிவேந்தன்" என்ற பட்டம் வழங்கித் தங்கப்பதக்கமும் அணிவிக்கப்பட்டு அவர் கௌரவிக்கப்பட்டார்.

ஆலய வளவில் சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட அற்புதர் அரங்கத் திறப்பு விழாவும் நன்றி உபசார வைபவமும் கடந்த 6 ஆம் திகதி மாலை ஆலய பரிபாலகர் வ. இராசநாயகம் தலைமையில் நடைபெற்றன.

இந்த விழாவில் பருத்தித்துறைப் புதிய பங்குத்தந்தை அருட்திரு. இருதயதாஸ் ஆசியுரை வழங்கினார். கௌரவ விருந்தினர்களாகப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, கத்தோலிக்க மறை ஆசிரியர் இ. ஜெயசீலன், கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் எஸ். சிதம்பரநாதன், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய அதிபர் க. ஞானசேகரம், கலைஞர்களான இரா. பஞ்சலிங்கம், தும்பளையூர் வேதநாயகம், புனித தொம்மையப்பர் ஆலய பொருளாளர். வின்சன் டிபோல் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

பருத்தித்துறைப் பங்கு மக்களின் அனுசரணையில் வாழ்த்துப்பாவை வழிபாட்டுக் குழுத் தலைவி ஆசிரியை திருமதி தேவராஜா மாலினி வாசித்து வழங்க "பணிவேந்தன்" என்ற பட்டத்தையும் தங்கப் பதக்கத்தையும் ஆலய பரிபாலகர் வ. இராசநாயகம் வழங்கிக் கௌரவித்தார்.

ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இந்த விழாவில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(இ-109)

## அண்மையில் இடம்பெயர்ந்த

# 210 குடும்பங்களுக்கு 3 மாதகால நிவாரணம்

வலி. கிழக்கு, மார்ச் 12

அண்மையில் ஷெல் வீச்சின் காரணமாக தென்மராட்சி, பளை, நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்து இடம் பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 210 குடும்பங்களுக்கு மூன்றுமாத உலர் உணவு நிவாரணம் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்து வசிக்கும் இக் குடும்பங்களுக்கு ஜனவரி மாதத்தில் இருந்து இம் மாதம் வரையிலான உலர் உணவு நிவாரணமே வழங்கப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-180)

## கால்நடை அமைச்சின் கீழ் உள்ள

# தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு போதனாசிரியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 12

கால்நடை அபிவிருத்தி அமைச்சின்கீழ்உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் தமிழ், மொழிமூல போதனாசிரியர், உதவிப் போதனாசிரியர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இந்தப் பதவிகளுக்கென விண்ணப்பிப்பவர்கள் யாழ். தொழில்நுட்பக் கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

25 வெற்றிடங்கள் உள்ள மேற்படி பதவிகளுக்கு தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில் நுட்பவியலாளரான தேசிய தராதரப் பத்திரம் (என்.சி.ரி) தொழிற் பயிற்சி தேசிய சான்றிதழ் (என்.சி.ஈ.சி.பி), தமிழ் சுருக்கெழுத்தாளர், தட்டெழுத்தாளர் பரீட்சைகளில் சித்தியெய்தியவர்கள் விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது, (ஐ-10)

## வலிகாமம் மேற்கில்

# சுகாதாரப்பணிமனைக்கு விரைவில் புதிய கட்டடம்

மூளாய், மார்ச் 12

வலிகாமம் மேற்கில் புதிய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது

மேற்படி பகுதிக்கான சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம் தற்போது வசதி எதுவும் இன்றி தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வருகிறது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாகவே இப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடத்தை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சங்கானை அரசினர் மருத்துவமனை அமைந்திருக்கும் பகுதியில் இக்கட்டடத்தை அமைப்பதற்கான காணி தெரிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்த கட்டநடவடிக்கை மிகவிரைவில் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது

(ஐ-99)

## சன சமூகநிலைய கட்டட வேலை பூர்த்தி

புன்னாலைக்கட்டுவன் கணேசா சனசமூக நிலைய கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

கன்னாகம் பிரதேச சபையின் விசேட நிதியில் இருந்து ஒன்றரை லட்சம் ரூபா நிதியில் மேற்படிகட்டடம்அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்திற்கு பொது மக்களும் கட்டடப் பொருள்களை அன்பளிப்பாக வழங்கியிருந்தனர்.

(ஐ-133)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

அளவெட்டி வடக்கு, அளவெட்டியில் வசிக்கும் கந்தையா பாஸ்கரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (551262987 V), இணுவிலுக்கும் மல்லாகத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இணுவில் பத்திரிகை விற்பனை நிலையத்தில் ஒப்படைக்கவும்.
(74399)

## விற்பனைக்கு

வீட்டுத் தளபாடங்கள், கல்லுரல், ஆட்டுக்கல், மின்மோட்டர் (Fish Tank Motor) விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ. நாகநாதன் கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. நேரம் காலை 9.00 — 4.00 வரை. (74323)

மா, பலா, தோடை, தேசி, கலர்றோஸ், செம்பரத்தை, குறோட்டன் மற்றும் பூக்கன்றுகள், பூச்சாடிகள், பூங்கன்றுக்குரிய 1½—2 அங்குல கல்லுகள், மருந்துகள்என்பன பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர்வளவு), முத்திரைச்சந்தையடி, நல்லூர்.
(74369)

கொழும்பில் இருந்து தருவிக்கப்பட்ட 30 முட்டைகள் வைக்கக்கூடிய தட்டுகள்வேண்டிய தொகையில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: K. அழகரட்ணம், நீர்வேலி தெற்கு, கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி. ரெலிபோன் No. 070—212803, 070 — 212354, 070 — 212652, 070 — 212383.
[74382]

பூச்சி மருந்து கொடுக்கப்பட்ட 45 நாள்கள் நிரம்பிய அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச. கிருபாகரன், அரசடி ஒழுங்கை, தாவடி கிழக்கு, கொக்குவில்.
(74395)

நல்லூர் அம்மன் வீதியையும், அரசடி வீதியையும் இணைக்கும் கந்தபுராண வீதியில் நான்கு பக்கமும் மதில் சுவருடன் உள்ள 2½ பரப்புக்காணியில் தரமான வீடு ஒன்று நீதியான விலையில் விற்பனைக்குண்டு. சண்முகராஜா, 387, கோயில் வீதி, நல்லூர். காலை 9.30க்குப் முன்னரும் மாலை 3.00 க்கு பின்னரும் நேரடியாகச் சந்திக்கலாம்.
(74402)

ஒட்டோ — 205 - 9210 விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இ. பாக்கியநாதன் மட்டுவில் தெற்கு, அமெரிக்கன் மிஷன் பாடசாலை றோட், சாவகச்சேரி. (74396)

## கார்விற்பனைக்கு

13 ஸ்ரீ, தொடர் இலக்கத்தைக் கொண்ட லான்சர் கார் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு நீங்கள் நாடவேண்டிய முகவரி:- இல. 352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(சி/11374)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி(Broilers) விற்பனைக்குண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.
(74274)

Broiler இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து ( பாதிக் கோழி உட்பட ) தினமும் பெற்றுக்கொள்ளலாம். இன்று விசேட சேவை. 19, முருகேசர் ஒழுங்கை, [ நல்லூர் வீடியோ சென்ரர் வளவு ] முத்திரைச் சந்தையடி, நல்லூர். [74273]

## மணமகன் தேவை

ரைப்பிங், A/Lதராதர உயர்தரம் 5' 4'' வயது 35 நற்பண்புள்ள படித்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்ற பெண்ணுக்கு கனடா அல்லது வியாபாரம், சாதாரண பதவி அரச உத்தியோகமுடையோர் மறுமணம் செய்வோர் **விண்ணப்பிக்கலாம்.** தகுதிக்கு ஏற்ற சீதனம் வழங்கப்படும். மோகனராணி ஏஜன்ட், 1051, கே.கே.எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
[74389]

## மணமக்கள் தேவை

எம்மிடம் 70 ஆம் ஆண்டு பெண், கார்த்திகை 2 ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமுள்ள, 81 பாவம் உடைய பொதுநிறப் பெண்ணுக்கு அரச, தனியார் வெளிநாட்டு மணமகன் தேவை. வெளிநாட்டுக்கு70-ம்ஆண்டுக்குப் பின் பிறந்த பெண்கள் தேவை. தொடர்பு: சோதிடர் ஸ்ரீமுருகன் சோதிட நிலையம், நல்லூர் வடக்கு.
(74392)

## வேலையாள் தேவை

கொழும்பில் வீட்டில் பணிபுரியக் கூடிய 30 வயதுக்குட்பட்ட பணிப் பெண் தேவை. தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல: 1020, மே/பா உதயன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[சி/11358]

## A/L இணைந்த கணிதம்

இணைந்த கணிதம், பௌதிகவியல், தூயபிரயோக கணிதம் அனுபவமும் பயிற்சியும் பெற்ற ஆசிரியரினால் மிகக் குறுகிய காலத்தில் சிறப்பாக முழுப் பாடத்திட்டமும் முடித்துக் கொடுக்கப்படும். (20 வருட வினாத்தாள் உட்பட) தனிப்பட்ட முறையிலும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. R. பாலசுப்பிரமணியம் B.Sc. (Cey) Dip.inEd. 17/1, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
(74360)

## மணமக்கள் தேவை

எம்மிடம் டாக்டர், என்ஜினியர், கணக்காளர், புள்ளிவிபரவியலாளர், ஆசிரியர், வர்த்தகர், எலெக்ரீசியன்மற்றும் ஆஸ்திரேலியா, கனடா, லண்டன், நோர்வே, டென்மார்க், பிரான்ஸ், இத்தாலி, சுவிஸ், நெதர்லாந்து, சவூதி, டோகா, மணமகன்களுக்கு உயர்கல்வி பதவி மணமகள்களுக்கும் மணமக்கள்தேவை. எம்முடன்செவ்வாய் தவிர்ந்த நாள்களில்தொடர்பு கொள்ளவும். சோதிடர்: ஸ்ரீ முருகன் சோதிட நிலையம் நல்லூர் வடக்கு வீதி.
(74391)

## MARRIAGE PROPOSAL


Marriage Proposals are executed in reliable, Speedy, and Satisfaction. We have various profession such as Govefnment, private Sector and abroad. Bridegrooms, Brides both Hindu, Christians and all section of people. For further detail, Please contact: No. 39, K. K S. Road, Poonary - Maraththady, Kokuvil.
(74375)

## இசைக் கருவி விற்பனைக்கு

Organ - PSR 100 Stereo மிகநல்லநிலையில். தொடர்பு: ADP கனகரத்தினம், புற்கை தின்னி பிள்ளையார் ஆலய முன் ஒழுங்கை, கூழாவடி, மானிப்பாய்.
(74362)

## SPOKEN ENGLISH

இங்கிலாந்தில் பயிற்சி பெற்ற ஆசிரியரால் சுலபமான முறையில் ஆங்கிலம், ஆங்கில மூலம் பயில வகுப்பில் 10 மாணவர்கள் மட்டும். ஆசிரியர்: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி Dip./Cer.in Science (London) நாகலிங்கம் சுவாமிகள் வீதி, சங்கானை.
(74311)




## Computer Point

(TRAINING — DIVISION)

Regd. No. J/DS/BR/63/97

**No.28, St Patrick's Road, Jaffna.**

(Discover The 20 th Century!!)

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

**19—03—2000** | 10. 30 A. M.
**26--03--2000** | [S. L. T.]

- Children's Computer Studies
- Beginner's Computer Studies (Programming in Basic Language)
- Advanced Computer Studies
- Diploma in Computer Studies
- Certificate Courses
  MS. Word MS. Excel MS. Power Poini
  MS. Outlook MS. Word Perfect (6. 0)
  MS. Access

Lectures By:- **S. R. Logendra**
[D. C. A., Systems Analyst, M. C. S. India]

★ வகுப்பு 8, 9, 10 மாணவர்களுக்கான பிரத்தியேக கணனி வகுப்புகள்.

★ G. C. E. O/L, G C. E. A/L, பல்கலைக்கழக மாணவர்களுக்கான விசேட கணனி வகுப்புகள்.

★ அனைத்து வகுப்புகளும் வார நாள்கள் சனி, ஞாயிறு நாள்களில் நடைபெறும்.

★ மிக விரைவில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று தங்கள் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

(74400) நிர்வாகி.

# இரண்டு வருடங்கள் இயங்காத புத்தூர் அரசினர் பாடசாலை

## புனரமைக்க நிதி இல்லை

வலி.கிழக்கு, மார்ச் 12

புத்தூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை இரண்டு வருட காலமாகப் புனரமைக்கப்படாத காரணத்தினால் புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் இயங்கிவருகின்றது.

இப்பாடசாலை வளவினுள் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிகள் அகற்றப்பட்டும் கூட கடந்த இரண்டு வருடங்களாகப் பாடசாலை புனரமைக்கப்படாததால் அது இயங்காமல் உள்ளதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாடசாலையைப் புனரமைக்க நிதி ஒதுக்குமாறு இப் பகுதி பொது அமைப்புக்கள் ஈ. பி. டி. பி. அமைப்பின் வலி. கிழக்குப் பொறுப்பாளர் எஸ். ரவி ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவைக் கேட்டுள்ளன.
(ஐ-180)

## கந்தபுராண படனம்

திருநெல்வேலி தலங்காவல் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றுவரும் கந்த புராண படனத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'சூரபன்மன் வதைப்படலம்' படிக்கப்படும்.

இளைப்பாறிய ஆசிரியை செல்வி ச. தங்கப்பொன் தலைமையில் இந்தநிகழ்வுகள் இடம்பெறுகின்றன. (ஐ-7)

## கணனிப் பயிற்சி

உரும்பிராய்இந்துக்கல்லூரியில் ஜி. சீ ஈ. உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

கல்லூரிக்கு வழங்கப்பட்ட கணனிப் ஒன்றின் மூலம் இப் பயிற்சி நடைபெற்று வருவதாகவும் மற்றுமொரு கணனியை பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (ஐ-135)

# இலவச மருத்துவ முகாம்

## யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம்

### அல்வாய் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின்

அனுசரணையுடன்

### இன்று ஞாயிற்றுக்கிழமை

இலவச மருத்துவ முகாமொன்றை Dr. T. குலநாயகம் தலைமையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டு மாணவர் குழுவினர் நடத்தவுள்ளனர். P J. பெர்னாண்டோ நிறுவனத்தினரின் கண் பரிசோதனையும் இடம்பெறும்.

நீரிழிவு, இரத்த அழுத்தம் மற்றும் பொதுவான நோய்களுக்கான மருத்துவப் பரிசோதனையும் சிகிச்சையுடன் மருந்துகளும் வழங்கப்படவுள்ளன.

அனைவரும் வருகைதந்து பயன்பெறுக.

**பேராசிரியர் இரா. சிவச்சந்திரன்**
தலைவர்,
யாழ். லயன்ஸ் கழகம்.

(சி/11372)

# பாசமுள்ள அன்னையின் ஓராண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 | 26 |
| — | — |
| 07 | 03 |
| — | — |
| 1933 | 1999 |

திருமதி

## வேலாயுதர் அன்னலட்சுமி

*திதி: 12—03—2000*

அன்பின் பிறப்பிடமே பண்பின் சிகரமே எங்கள் குலவிளக்கே பாசத்தின் உறைவிடமாய் எம்மை எல்லாம் வளர்த்தெடுத்த அம்மாவே ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறுமோ எங்கள் துயர்? அம்மா என்றழைக்க எப்பிறப்பில் காண்போம் நாம்?

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் மதிய போசனம் வழங்கப்படும்.

உங்கள் பிரிவால் துயருறும்
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பிருந்தாவனம்,
கைதடி வடக்கு,
கைதடி.

(74404)

## ஸ்ரீ அம்பாள் தொலைத் தொடர்பு சேவை நிலையம்

இன்று (12.03.2000) ஞாயிற்றுக்கிழமை தனது 1ஆம் வருட பூர்த்தியை முன்னிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றது. நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இன்று உள்வரும் அழைப்புக்கள் யாவும் இலவசம் என்பதனை பெரும் மனமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

**உங்கள் தேவையே! எங்கள் சேவை!**

ஸ்தாபனத்தினர்

கிளை ஸ்தாபனம்:
சீரணி, சண்டிலிப்பாய்.
T.P. NO :-
உள் இல:- 021-3228
வெளி இல:- 0094-21-3229
பக்ஸ்:- 0094-21-3229

பொன்னாலை வீதி,
கட்டுடை, மானிப்பாய்.
T.P.NO :-
உள் இல:- 021-2678
வெளி இல:- 0094-21-2678
பக்ஸ்:- 0094-21-2678

(74328)


## கண்ணீர்க் காணிக்கை

எமது நிறுவன தையல் பயிற்சி மாணவி

செல்வி செல்லத்துரை சுபாஷினி
(கச்சாய் தெற்கு)


**அவர்களின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.**

ஆசிரியை, சக மாணவிகள்
**துவாரகா தையல் நிலையம்.**

*27, தனங்களப்பு வீதி,*
*சாவகச்சேரி.*

(C/11378)

## கண்ணீர் அஞ்சலி



R. சிறிகாந்தன் (சிறி)
(I.P.T ஸ்ரீலங்கா ரெலிக்கொம் லிமிற்றெட்)

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும். அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவர்களது துயரில் நாமும் பங்குகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்

*அலன் பான்சி ஹவுஸ்*
*அலன் அலுமினியம் இன்டஸ்ரி,*
*இல.265, மானிப்பாய் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(74403)

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
03
-
02
-
1954



மறைவு
06
-
03
-
2000

இரத்தினம் சிறிகாந்தன் (சிறி)
(I.P.T. Telecom)

**அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.**

*சந்தை ஒழுங்கை,*
*மானிப்பாய்.*

சு.கற்பகமூர்த்தி குடும்பத்தினர்
(மைத்துனர்)

(74405)

## தவக்காலச் சிந்தனை

மீண்டும் மாபெரும் ஜூபிலி ஆண்டில் தவக்காலம் இறைவனின் கொடையாக எமக்கு வழங்கப்படுகின்றது. மனமாற்றத்துக்கு உரிய இக்காலத்தில் செபத்தினாலும் தவத்தினாலும் எமது வாழ்வை மாற்றி அமைக்கவும் அதனூடாக அயலவனோடும் வானகத் தந்தையோடும் ஒப்புரவாகி புதுஉறவை ஏற்படுத்த நமக்கு அழைப்பு விடுக்கின்றது.

உள்ளத்தில் எழுந்த ஆசையினால் மனிதன் பாவம் செய்தான். அதனால் உரிமை வாழ்வையும் அதனூடாக கிடைக்கும் உண்மையான மனமகிழ்ச்சியையும் இழந்து தவித்தான். ஒருமனிதன் தன் வாழ்க்கையில் அமைதியைப் பெறவிரும்பினால் அவன் தனது பாவத்தை விட்டு எல்லா நலன்களுக்கும் ஊற்றாகிய இறைவன் பக்கம் திரும்ப வேண்டும்.

இயேசுவின் பொதுவாழ்க்கை மக்கள் மனம் திரும்பவேண்டும் என்ற போதனையோடு தொடங்குகின்றது. எதற்காக மனம் திரும்ப வேண்டும் என்ற காரணத்தையும் இயேசு சுட்டிக்காட்டுகின்றார். பாவத்தினால் இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையே நிலவிய அன்பும் உறவும் முறிந்துபோக அதை சீர்படுத்துவதற்கு புதிய உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தி தம் மக்களை வழிப்படுத்துகின்றார்.

எனவே நோன்பிருந்து தவக்காலத்தில் நற்பயன் பெறவும் பாவத்திற்கு அடிமையாகாமல் செபத்தினூடாக போராடி வெற்றிகாணவும் ஆன்மீகப் புதுப்பித்தலில் அதிக அக்கறை கொண்டு, தேவ ஆவிக்குரியவர்களாக வாழ்ந்து, தமது உள்ளத்தை இறைவன் பக்கம் திருப்பி, நாம் ஆவலோடு தேடும் நீதியையும் உண்மையான சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் பெற்று வாழ முயற்சிப்போம்.

**இ.அ.அமலரட்ணம்**
யாழ்ப்பாணம்.

## விளையாட்டுப் போட்டிகள்

வலி.வடக்கு,மார்ச் 12

வலி.வடக்கு பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் கழகங்களுக்கு இடையே நடைபெறும் தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற உள்ளது. (இ-4-86)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 12

யாழ்.பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெறும். (இ-4)

* * *

தீவுப் பகுதி தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி இன்று காலை 10மணிக்கு நயினாதீவு மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் பிரதேச செயலர் செ.இரத்தினம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீ.வி. கிருஷ்ணசாமி, கௌரவ விருந்தினராக வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரமூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், வேலணைக் கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன், முன்னாள்வேலணை உதவி அரசாங்க அதிபர் கா.ஆ.தியாகராசா மற்றும் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி எவ்.ஜே. ரூபசிங்கம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-4-167-73)

* * *

நெல்லியடி,மார்ச் 12

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் கரவெட்டி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும்.

(இ-4-109)


## பதவி வெற்றிடம்

**கணக்குப் பதிவு உட்பட எழுதுநர் தேவை (ஆண்)**

**வயதெல்லை:-** 50 - 65 வருடங்கள்

**தகைமை:-** S.S.C. ஆங்கிலம் அல்லது ஆங்கிலம் உட்பட க.பொ.த.சா/தரத்தில் 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் கணக்குப்பதிவியலும் தெரிந்திருக்கவேண்டும்.
அரச/தனியார் நிறுவனங்களில் பணிபுரிந்த ஓய்வூதியம் பெறும், தனிநபராக உள்ள ஊழியர் விரும்பத்தக்கது.

**குறிப்பு:-** இருப்பிட, உணவு வசதிகள் உண்டு. அனுபவமும், நேர்மையும் சேவை மனப்பான்மையுடன் பணிசெய்ய விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. சுயவிவரக் கோவையுடன் விண்ணப்பிக்கவும். ஊதியம் பேசி தீர்மானிக்கப்படும்.

**முடிவுத் திகதி:-** 23.03.2000

செயலாளர்
ஸ்ரீ பரமானந்தா ஆச்சிரமம்
தர்மகர்த்தாக்கள் சபை

வதிரி
கரவெட்டி

(C/11376)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
அருட்செல்வநாயகி இராசரத்தினம்

மண்ணில்
14.10.1935

விண்ணில்
11.02.2000

அம்மா, பத்து மாதம் சுமந்து பெற்றாய்
பகல் இரவாய் வளர்த்தாய்
பார் வாழ்த்த நாம் வாழ
கனவு கண்டாய்
வாடுகின்றோம் நீ இன்றி
கண்ணீரில் இன்று.

- பிள்ளைகள்

*கல்வயல்,*
*சாவகச்சேரி.*

(74420)

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றிநவிலலும்

தாயின்
மடியில்
1942
-
06
-
12



ஆண்டவன்
அடியில்
2000
-
02
-
11

திருமதி நாகரத்தினம் இராசரத்தினம்

கடந்த 11.02.2000 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (12.03.2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு சகல வழிகளிலும் உதவிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்:
இராசரத்தினம்
(கணவர்)

பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

(C/11379)

# ஜோசப் எம். பியின் வாகனம் பொலீஸாரால் கடும்சோதனை

## ஜனாதிபதியிடம் முறையிடுவாராம்

தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கியஸ்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் நேற்று மட்டக்களப்பு மன்னம்பிட்டி சோதனைச் சாவடியில் வைத்து கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டார். அவரது வாகனத்தைப் பொலீஸார் மிகவும் நுணுக்கமாக சோதனை செய்தனர்.

கொழும்பிலிருந்து தமது மெய்ப்பாதுகாவலர் சகிதம் மட்டக்களப்பு நோக்கி வாகனத்தில் வந்துகொண்டிருந்த அவரை மன்னம்பிட்டி சோதனைச் சாவடியில் வழிமறித்த பொலீஸார், அவர் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதை அடையாளம் கண்டு கொண்ட பின்னரும் சோதனை செய்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவரவுள்ளதாகத் தெரிவித்த ஜோசப் பரராஜசிங்கம், இச்செயல் நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை மீறுவதாகத் தெரிவித்தார். (இ-5)

## குடும்பநலசேவை உத்தியோகத்தர் நேர்முகப் பரீட்சை

திருநெல்வேலி,மார்ச் 12

ஒன்றரை வருடகாலப் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த 14மாணவ குடும்பநல சேவை உத்தியோகத்தர்களுக்கான இறுதிப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது. இவர்களுக்கான வாய்மொழி மூலப் பரீட்சையும் செய்முறைப் பரீட்சையும் இம்மாதம் 20 ஆம்,21ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைகளில் சித்தியடைபவர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் யாழ்.மாவட்டத்திலுள்ள வெற்றிடங்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

யாழ். மாவட்டத்தில் குடும்ப நல சேவை உத்தியோகத்தர்களுக்கான சுமார் 120 வெற்றிடங்கள் நிரப்பப்படாமல் இருந்து வருவதாக அறிய முடிகின்றது. ஒரு குடும்பநல சேவை உத்தியோகத்தர் தமது பிரிவுடன் வேறு வெற்றிடமாகவுள்ள பிரிவுகளிலும் பதில் கடமையாற்றி வரும் நிலையும் இங்கு இருந்து வருகின்றது. (ஐ-135-15)

## வாகரையில் மீனவர்கள் கடத்தப்பட்டனர்

மட்டக்களப்பு வாகரைக் கடற்பகுதியில் நேற்று அதிகாலை தொழிலுக்குச் சென்ற நான்கு மீனவர்கள் அவர்களது வள்ளங்களுடன் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்டவர்களுடன் தொழிலுக்குச் சென்ற ஏனைய மீனவர்கள் இந்தச் சம்பவம் குறித்து வாழைச்சேனைப் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (இ-6-க)

## சமாதானப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்த வேண்டி ஏற்படும். எனினும் பேச்சுக்களுக்கு முக்கியத்துவம் அளித்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதே அரசின் ஒரே நோக்கமாகும். அதற்கான முழு முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-6-க)

## ஆயுததாரிகளைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்ற ஆயுததாரிகள் பதுங்கி இருந்த 'செப்பென்ரைன்' தொடர் மாடிக் குடியிருப்புவாசி ஒருவர் தெரிவித்தார்.

சம்பவம் பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நான் எனது நண்பர்களுடன் சிறுவர் பூங்காவுக்கு அருகில் கதைத்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது வெடிச்சத்தங்கள் கேட்டன. அவை எங்கிருந்து கேட்டன என்பது எனக்குத் தெரியவில்லை. நான் அங்கிருந்து சற்றுத்தூரம் சென்ற பின்னர் ஒரு குழுவினர் விரைந்து வருவதைக் கண்டேன். அவர்களை இராணுவத்தினர் என்றே முதலில் எண்ணினேன். அவர்களில் ஒருவர் என்னை தமிழ் மொழியில் அழைத்தார். நான் பயத்தில் அங்கிருந்து ஓடிவிட்டேன்.

அவர்கள் பலவிதமான ஆயுதங்களைத் தம்முடன் வைத்திருந்தனர்.

பின்னர் அவர்கள் அமைதியாக தொடர்மாடிக் கட்டடத்தின் 'ஈ' பகுதிக்குள் நுழைந்தனர்" - என்றார்.

மற்றைய ஒருவர் தெரிவித்ததாவது:-

"நானும் எனது தாயாரும் வீட்டில் இருந்தோம். அப்போது யாரோ வருவதைக் கண்டோம். அந்த நேரத்தில் தொடர் வெடிச்சத்தங்கள் கேட்டன. நாங்கள் பயம் காரணமாக கட்டிலுக்கு அடியில் பதுங்கிக் கொண்டோம். நேற்றுமுன்தினம் மாலை 6.30 மணிமுதல் நேற்றுக் காலை 7 மணிவரை அப்படியே கட்டிலுக்குக் கீழ் இருந்தோம்" - என்றார். (இ-6)

# மீன்பிடி நேரம், தூரம் அதிகரிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச் 12

யாழ். நீரேரியில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்ட நேரம், தூரம் ஆகியவற்றை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.கரையோர மீனவர்கள் யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்த குருநகர், பாஷையூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அவருக்கு எடுத்துக் கூறினர்.

மீன்பிடிப்பதற்கான நேரம், தூரம் ஆகியவற்றை அதிகரிக்க படைஅதிகாரிகளுடன் பேச்சு நடத்தி அனுமதி பெற்றுத் தருமாறு அவர்கள் கோரினர்.

அண்மைய இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்தவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டபடி 25ரூபா நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் அவர்கள் அரச அதிபரிடம் கோரிக்கை முன்வைத்தனர். (உ-3-9)

## ஆயுததாரிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் அங்கிருந்த கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றில் இருந்து உணவுப் பொருள்கள் சிலவற்றையும் எடுத்துச்சென்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயுததாரிகள் கட்டடத்துக்குள் நுழைந்ததை அடுத்து அந்தப் பகுதியை நூற்றுக்கணக்கான படையினர் சுற்றிவளைத்தனர். கட்டடத் தொகுதியில் இருந்து பொதுமக்கள் வெளியேற்றப்பட்டனர்.

அதன் பின்னர் நள்ளிரவு முதல் படையினருக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையே தொடர்ந்து துப்பாக்கிச் சமர் இடம்பெற்றது. அதிகாலை 4.40 மணியளவில் விசேட அதிரடிப் படையினர் திடீர் தாக்குதல் ஒன்றை நடத்தி கட்டடத்தினுள் புக முயன்றனர்.

இந்த மோதலின் போது படையினரின் தாக்குதலில் ஒரு ஆயுததாரி உயிரிழந்தார். அதைத் தொடர்ந்து சில குண்டுச் சத்தங்கள் அப்பிரதேசத்தை அதிர வைத்தன.

காலையில் கட்டடத்துக்குள் நுழைந்த படையினர் அங்கு நான்கு ஆயுததாரிகளினதும் சிதறிய உடல்களைக் கண்டனர். அவர்கள் தமது உடலில் பொருத்தப்பட்டிருந்த குண்டுகளை வெடிக்க வைத்ததனால் உடல்களின் முன் பகுதி சிதைந்து காணப்படுவதாகவும் உடல்களின் பாகங்கள் சிதறிக் காணப்படுவதாகவும் பொலீஸார் தெரிவித்தனர்.

தொடர்மாடிக் கட்டடத்தில் ஆயுததாரிகளுக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையில் நடைபெற்ற துப்பாக்கிச் சமரில் ஆறு விசேட அதிரடிப் படையினரும் சில பொதுமக்களும் காயமடைந்தனர். அத்துடன் கட்டடத்துக்கும் சேதம் ஏற்பட்டது.

ஆயுததாரிகள் பயன்படுத்தியதாகக் கருதப்படும் தன்னியக்கத் துப்பாக்கிகள், ஆர்.பி.ஜி. ரொக்கட் லோஞ்சர்கள், கிரனேட்டுகள், 4 அடையாள அட்டைகள், சயனைட்டுகள் என்பவற்றை அந்தக் கட்டடத் தொகுதியில் இருந்து பொலீஸார் மீட்டுள்ளனர். (இ-5-6-க)

## பொலீஸார் மீது கிரனேட் வீச்சு!

திருகோணமலை,மார்ச்12

திருகோணமலை அன்புவழிபுரத்தில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் பொலீஸார் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது பொலீஸ் தரப்பில் ஒருவர் காயமடைந்தார் (இ-5)

# மரண அறிவித்தல்கள்

## சிவக்கொழுந்து சீனிவாசகம்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து சீனிவாசகம் நேற்றுமுன்தினம் (10.03.2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - தங்கமுத்துவின் அன்பு மருமகனும் பாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற வேலாயுதம் (பரந்தன்), மாசிலாமணி (ஆபரண மாளிகை, கஸ்தூரியார் வீதி), காலஞ்சென்ற சபாரட்ணம், காலஞ்சென்ற நவரட்ணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கிருபாலினி (ஜேர்மனி), திருபாலினி, ரூபி (ஜேர்மனி), கௌசலா, நிருபாதேவி (ஜேர்மனி), விதுப்பிரியா (ஆசிரியை, இ.த.க. பாடசாலை நீர்வேலி தெற்கு) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் நற் குணராஜா (ஜேர்மனி), மோகனராஜ், உதயகுமார் (ஜேர்மனி), சூரியகுமார், செல்வராஜா (ஜேர்மனி), தர்மகுலசிங்கம் (குலம், பருத்தித்துறை) ஆகி யோரின் அன்பு மாமனும் நிசாந்தன், பாகினி, விதுசனா, லக்சனா, தினே ஸ்க்கா, தாரணி, டிலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் புதிய செம்மணி வீதியில் இருக்கும் அவரது இல்லத்தில் இன்று (12.03.2000) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு (ப.நே.) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.

தகவல்:
மோகனராஜ்
(மருமகன்)

(74411)

## திருமதி கமலாதேவி சபாநாயகம்

(சரசாலை)

சரசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாதேவி சபாநாயகம் 09.03.2000 வியாழக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் தம்பிஐயா சபாநாயகம் (நில அளவையாளர்) அவர்களின் துணைவியாரும் திருமதி கோதை நகுலராசா (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை), இளங்கோ (ஜெகா ரெக்ஸ், சாவகச்சேரி), திருநந்தி (மேலாளர், சிங்கர் கம்பனி திருகோணமலை), அகிலன் (ஆசிரியர், அரபாகல்லூரி மாத்தறை), திலகன் (மாணவன், யாழ். இந்துக்கல்லூரி 2001) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சி.நகுலராசா (ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி) ஜெகதீஸ்வரி ஆகியோரின் அருமை மாமியும் பிரதாபன், கஜன், கார்த்திக், மயூரி, பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சற்குணம் (மங்களம்ஸ், சாவகச்சேரி) ஞானேஸ்வரன் (பராசக்தி களஞ்சியம், சாவகச்சேரி), நேசமலர் (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் மங்களம்மா அவர்களின் அன்பு மகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2000) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று சரசாலை கொம்பிகுளம் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பாகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை.

தகவல்:
த.சபாநாயகம்
(துணைவர்)

(74414)

## திருமதி வேலாயுதம் பரமேஸ்வரி

அல்வாய் வடக்கு குமுதெணியைச் சேர்ந்த திருமதி வேலாயுதம் பர மேஸ்வரி நேற்றுமுன்தினம் (10.03.2000) வெள்ளிக்கிழமை இரவு கால மானார்.

அன்னார் சின்னத்தம்பி வேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும் திருமதி சின்னராசா பூங்கோதை, திருமதி விஜயரட்ணம் சந்திரராணி (ஜேர்மனி), திருமதி பாலச்சந்திரன் பூரணேஸ்வரி (சுவிஸ்), வேலாயுதம் சிவவேல் (ஜேர்மனி), திருமதி கஜேந்திரராசா தமிழ்ச்செல்வி, திருமதி பொன்ராசா றோஸ்மலர், திருமதி இராசரட்ணம் தவச்செல்வி, செல்வி வே.கலைச்செல்வி (சமுர்த்தி ஊக்குவிப்பாளர், பிரதேச செயலகம், பருத் தித்துறை) வே.சக்திவேல் (ஜேர்மனி), வே.ஞானவேல் (லண்டன்), வே.செந் திவேல் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்வாய் வடக்கு,
குமுதெணி.

தகவல்:
த.சின்னராசா
(மருமகன்)

(74415)

## நல்லதம்பி சீனித்தம்பி

புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சீனித்தம்பி நேற்று (11.03.2000) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும் கந்தசாமி, சிவசுப்பிர மணியம், சிதம்பரநாயகம் (சுவிஸ்), தர்மராணி, தர்மமலா, சத்தியதேவி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் செல்வரத்தினம், ஜெகதீஸ்வரி, லலிதாதேவி, தயாபரன், ஞானேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சயந்தி, காயத்திரி, கம்சாயினி, நிரோசன், நிசாந், விநோஜ், தாரணி, தனுசன், டினேஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.03.2000) ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினா, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

தகவல்:
சிவசுப்பிரமணியம்
(மகன்)

(74409)

# கண்ணீர் அஞ்சலி

கைதடி தெற்கு மின்னொளி கல்விக் கழக மாணவியான **செல்வி செல்வராசா நந்தினி** (கைதடி மத்தி) அவர்களின் பாசமிகு தந்தையாரான

## அமரர் சிதம்பரன் செல்வராசா

(அரச இயந்திர இயக்குநர்)

அவர்கள் 10.03.2000 அன்று இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கைதடி தெற்கு மின்னொளி கல்விக் கழக
இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

(74413)

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்க வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் சங்கத் தலைவரும் சமூக சேவையாளருமாகிய தம்பிஐயா சபாநாயகம அவர்களின் பாசமிகு துணைவியார்

## திருமதி சபாநாயகம் கமலாதேவி

அவர்களது மறைவுச்செய்தி கேட்டு கவலையடைகின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சரசாலை வடக்கு ஐக்கிய நாணய சங்கம்.
ப.சிவராசா (பொருளாளர்)
நா.ஞானசேகரம் (அங்கத்தவர்)
வே.இராகேஸ்வரன் (அங்கத்தவர்)
த.அருளீசன் (அங்கத்தவர்)

*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.*

(74412)


**ஷண்ணின் வீடியோ C.D.**

**- முகவரி -**

வெட்டுப்படாத 2 1/2மணி நேர முழுமையான படம் எம்மிடம் மட்டுமே உள்ளது. பிரதிகளை இன்றே பெறலாம்.

முழுமையான பிரதிகளை வழங்குவதில்

ஷண் நம்பர் வண்

**ஷண் றெக்கோடிங் ஸ்பொட்**

யாழ்ப்பாணம். (74422)

**ஒரிஜினல் வீடியோ C.D. வெளியீடு**

அஜித், ஜோதிகா நடித்த

**முகவரி**

பிரதிகள் உடன் பெறலாம்.

**விஷ்ணு வீடியோ**

K.K.S. Rd,
கோண்டாவில். (74419)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.